215048

செந்தமிழ்

தொகுதி XXXIII   Feb - March 1936

JL.
[illegible]
[illegible]
215048

OFFICE OF THE ...
14 FEB 193..

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௩.] யுவஹூ மாசிமீ [பகுதி-௪.
Vol. XXXIII. February-March 1936. No. 4.

உள்ளுறை.

நியாயப்பிரவேசமணிமேகலை:—பத்திராசிரியர். ௮௯—௯௮
விபீஷணசரணாகதி:—ஸ்ரீமத்: N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார் B.A., B.L. ௯௯—௧௦௩
மதுரைத்தமிழ்ச்சங்கநிர்வாகஸபைத்தீர்மானங்கள்:— ௧௦௩—௧௦௪
சில ஆராய்ச்சி:—ஸ்ரீமத். சி. கணேசையர். ௧௦௫—௧௦௬
பாண்டியர்வரலாறு:-ஸ்ரீமத் T. V. சதாசிவபண்டாரத்தார் ௧௦௭-௧௦௯
மதிப்புரை:— ௧௧௦—௧௧௩
அநுதாபக்குறிப்பு:—பத்திராசிரியர். ௧௧௪
இரங்கற்பாக்கள்:—ஸ்ரீமத். சு. நல்லசிவன்பிள்ளை. ௧௧௫—௧௧௬
சிராமலைக்கோவை:- (குறிப்புரையுடன்) } ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி - டாக்டர் உ. வே. சாமிநாதையர். 57—64
பெருந்தொகைப் பொருட்குறிப்பகாதி, முகவுரை முதலியவை:- } ஸ்ரீமத். மு. இராகவையங்கார். 87—91, ௧—௮

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
ாடுகளுக்கு ரூ 4—8—0.
1936.

athu R. SHANMUGA RAJESWARA
A SETHUPATHY AVERGAL and
y THIRU. NARAYANA IYENGAR at the
Ta... Power Press, No. 54, New Jail Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
	ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௩.]	யுவ௵ மாசி௴	[பகுதி-௪.
Vol. XXXIII.	February-March 1936.	No. 4.

நியாயப்பிரவேச மணிமேகலை.

[௭௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

III. விருத்தவேதுப்போலி.

இனி விருத்தவேதுப்போலிவகை நிரூபிக்கப்படும்.

விருத்தவேதுப்போலியாவது:—வாதிகூறும் ஏது அவன்கூறும் துணிபொருளை மாறுபடத்துணிதற்கு உரியதாயிருப்பது என்பது நியாயநூல்வழக்கு.

ஈண்டு அதனை உடன்பட்டும் சிறிது வேறுபடுத்தியும் நான்கு வகையாகப் பகுத்துவழங்குகின்றனர். அவை:—

(1) தன் துணிபொருளின் சொரூபங்கெடுமாறு மறுதலைப் பட்டபொருளைத் துணிதற்கு உரியதாயிருப்பதும்,

(2) தன் துணிபொருளினுள்ள விசேடங்கெடத்துணிதற்கு உரியதாயிருப்பதும்,

(3) தன் துணிபொருட்குப் பற்றுக்கோடான பக்கப்பொருளின் சொரூபங்கெடத் துணிதற்கு உரியதாயிருப்பதும்,

(4) தன் துணிபொருட்குப் பற்றுக்கோடான பக்கப்பொருளின் விசேடங்கெடத் துணிதற்கு உரியதாயிருப்பதும் ஆம்.

இம்முறையானே நியாயப்பிரவேசத்தில் விருத்தவேதுப்போலியின் தொகையும் வகையும் வருமாறு:—

விருத்த ஹேத்வாபாஸ: சதுஷ்ப்ரகார:। தத்யதா?

(1) தர்மஸ்வரூபவிபரீதஸாதந:

(2) தர்மவிசேஷவிபரீதஸாதந:

(3) தர்மிஸ்வரூபவிபரீதஸாதந:

(4) தர்மிவிசேஷவிபரீதஸாதநஸ்சேதி.

இதன்பொருள்:—விருத்தவேதுப்போலி நான்குவகைப்படும். அஃதெங்ஙனம்? எனில், தர்மஸ்வரூபவிபரீதசாதநமும், தர்மவிசேஷவிபரீதசாதநமும், தர்மிஸ்வரூபவிபரீதசாதநமும், தர்மிவிசேஷவிபரீதசாதநமும் ஆம் என்பது.

மணிமேகலையில் இவை வருமாறு:—

"விருத்தந் தன்னைத் திருத்தக விளம்பிற்
றன்மச் சொருப விபரீத சாதநந்
தன்ம விசேட விபரீத சாதநந்
தன்மிச் சொருப விபரீத சாதநந்
தன்மி விசேட விபரீத சாதந
மென்ன நான்கு வகைய தாகும்." (உஎகூ – உஅக)

என்பது.

இதனுள் நியாயப்பிரவேசத்திற் சொல்லியபடியே தொகையும் வகையும் சொல்லப்பட்டன.

1. தர்மஸ்வரூபவிபரீதசாதநம்.

இவற்றுள் முதற்கண் நின்ற தர்மஸ்வரூபவிபரீதசாதநம் வருமாறு.

தத்ர தர்மஸ்வரூபவிபரீதஸாதநோ யதா?
நித்ய: ஶப்த: க்ருதகத்வாத், ப்ரயத்நாநந்தரீயகத்வாத்வேதி:-
அயம் ஹேது: விபக்ஷ ஏவ பாவாத் விருத்த:

இதன்பொருள்:—'முற்கூறிய நான்குவகை விருத்தவேதுப்போலிகளுள், தர்மஸ்வரூப விபரீதசாதகம் எங்ஙனம்? எனின், சத்தம் நித்தியப்பொருள், காரியப்பொருளாதலால், அல்லது முயற்சியாற்றோன்றுதலால் (என்பது.) இவ்வேதுப்பொருள் விபக்ஷத்தில்மாத்திரம் இருத்தலால் விருத்தமாயிற்று' என்பதாம்.

இதனுள் ஏது விகற்பிக்கப்பட்டது; மணிமேகலையில் இவ்வாறு விகற்பிக்கப்பட்டதாயில்லை. இவ்வேது விபக்ஷத்தில்மாத்திரம் உண்மையால் விருத்தமாயிற்று என்று இது விருத்தமாதற்குக் காரணம் கூறப்பட்டது; மணிமேகலையில் இது விரித்து விளக்கப்பட்டது.

மணிமேகலையில் இதன் இலக்கணம் வருமாறு:—

"......................................அத்
தன்மச் சொருப விபரீத சாதநஞ்
சொன்ன வேதுவிற் சாத்திய தன்மத்
துருவங்கெடுதல்" (உஅக – உஅச)

என்பது.

இதன் பொருள்:—'தன்மச்சொருபவிபரீதசாதநத்தின் இலக்கணமாவது: வாதிகூறிய அவ்வேதுவினாலேயே அவன்கூறிய துணிபொருள் இல்லையாம்படி அத்துணிபொருளின்சொருபம் கெடுதல்' என்பதாம். அதாவது:- வாதிகூறிய ஏது, அவன்கூறிய துணிபொருள் இல்லையென்று எதிரி மறுப்பதற்கு உரியதாயிருத்தல் என்றபடி. [இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்தில் இல்லை.]

இனி இவ்விலக்கணம் அமைந்த ஒருதாரணங்காட்டி விளக்கப்படும். அது வருமாறு:—

"..............................சத்த நித்தம்
பண்ணப் படுதலி னென்றாற் பண்ணப்
படுவ தநித்தமா தலிற்பண்ணப் பட்ட
வேதுச் சாத்திய தன்மநித் தத்தைவிட்
டநித்தஞ் சாதிக்க லான்விபரீதம்" (உஅச–உஅஅ)

இதனுள், 'சத்தம் நித்தம், பண்ணப்படுதலால்' என்றது உதாரணம். இவ்வுதாரணத்துள், சத்தம் பக்கப்பொருள். நித்தமாதல் துணிபொருள்; இது சாத்தியதன்மமெனவும், தன்மமெனவும்படும். பண்ணப்படுதல் ஏதுப்பொருள்.

பண்ணப்படுவது அநித்தமாதலின் என்றது இது விருத்தவேதுவாதற்குக் காரணம் காட்டியவாறு. அதாவது: இங்கு, சத்தத்தில் துணியக்கருதிய தன்மஸ்வரூபம் நித்தமாதல்; இதனைவிட்டு அநித்தத்தில் வியாபித்திருத்தலால் என்றபடி.

பண்ணப்படுதலாகிய ஏதுவென்பார் பண்ணப்பட்டவேது என்றார்; பண்ணப்படுஞ்செயலே ஏதுவாதலால் அது தொழிற்பெயர்ப்பாற்பட்டுப் பெயரெச்சத்துக்கு முடிபாயிற்று; அல்லதூஉம் பண்ணப்படுதலால் என்று சொல்லப்பட்டவேது என்பார் பண்ணப்பட்டவது என்றார் எனினுமாம். பண்ணப்படுதல் - முயற்சியாற் றோன்றுவிக்கப்படுதல்.

'சாத்தியதன்மநித்தத்தைவிட்டு அநித்தம் சாதித்தலான் விபரீதம்' என்றது சத்தமாகிய தன்மியில் துணியக்கருதிய தன்மமாகிய நித்தத்தன்மையைச் சாதிக்கமாட்டாமற் கைவிட்டு, அதன் மறுதலைப்பொருளாகிய அநித்தத்தன்மையைச் சாதித்தற்கு உரியதாயிருத்தலால் இது தன்மச்சொரூபவிபரீதசாதநமாம் என்றவாறு.

ஈண்டு, நித்தத்தன்மை அநித்தத்தன்மை என்னற்பாலன முறையே நித்தம் அநித்தம் என நின்றன. 'எழுத்தொடுபுணர்ந்து' என்பதுபோல. இது பண்பின்பெயர் பண்பிற்கானமையால் ஆகுபெயர்.

சாத்தியதன்மமாகிய நித்தத்தன்மையை விடுதலாவது: 'யாது யாது பண்ணப்படுவது அது அது நித்தம், இதுபோலும்' என்று ஒருதாரணமேனும் சுட்டிக்காட்டுதற்கு இடமில்லாதிருத்தல்.—அதாவது—நித்தத்தன்மையுள்ள ஆகாசமுதலிய சபக்கப்பொருளொன்றினும் ஏது இலதாதல்.

அநித்தம் சாதித்தலாவது.—எதிரியால், யாது யாது பண்ணப்படுவது, அது அது அநித்தம்; குடம்போலும் என்று தன்மியின் சொரூபம் கெடுமாறு உதாரணங் காட்டும்படி துணிபொருளில்லாத விபக்கமாகிய அநித்தப்பொருள்களில் வியாபித்திருத்தல். அநித்தம் - நாசமடைவது. விபரீதம் - விருத்தம். [இவ்வாறுன விளக்கவுரை நியாயப்பிரவேசத்தில் இல்லை.]

2. தர்மவிசேஷவிபரீதசாதநம்.

இனி, நியாயப்பிரவேசத்தில் தர்மவிசேஷ விபரீதஸாதநம் வருமாறு.

ധൎമ്മവിശേഷവിപരീതസാധനോ യഥാ?
പരാൎത്ഥാശ്ചക്ഷുരാദയഃ സംഘാതത്വാ
ച്ഛയനാസനാദ്യംഗവിശേഷവദിതി.
അയം ഹേതുഃ യഥാ പാരാൎത്ഥ്യം
ചക്ഷുരാദീനാം സാധയതി
തഥാ സംഹതത്വമപി പരസ്യാത്മനഃ സാധയതി
ഉഭയത്രാവ്യഭിചാരാൽ.

இதன் பொருள்: 'தர்மவிசேஷவிபரீதஸாதநம் எங்ஙனமெனில் கண்முதலிய இந்திரியங்கள் பரார்த்தப்பொருளாயுள்ளன; கூட்டமாயிருத்தலால்; படுக்கை இருக்கை முதலிய அங்கவிசேஷம்போலும் (என்பது); இவ்வேதுப்பொருள் எங்ஙனம் கண்முதலிய இந்திரியங்களுக்குப் பரார்த்தத்தன்மையைச் சாதிக்கிறதோ அங்ஙனமே பரமான ஆன்மாவிற்கு அவயவக்கூட்டமுடைமையையும் சாதிக்கிறது. இரண்டுபக்கத்திலும் வியபிசாரமில்லாமையால்' என்றவாறு.

இங்கு இவ்வேதுப்போலிக்கு உதாரணங் காட்டி அது ஏதுப்போலியாதற்குக் காரணம் தொகுத்துக்கூறப்பட்டிருக்கிறது; அது விரித்துவிளக்கப்படவில்லை; மணிமேகலையில் இலக்கணங்கூறி உதாரணங்காட்டி விளக்கப்பட்டிருக்கிறது.

மணிமேகலையில் இதன் இலக்கணம் வருமாறு:—

"தன்ம விசேட விபரீத சாதனஞ்
சொன்ன வேதுச் சாத்திய தன்மந்
தன்னிடை விசேடங் கெடச்சா தித்தல்" (உ அகூ—கூக)

என்பது.

இதன்பொருள்: 'தன்மவிசேடவிபரீதசாதனத்தின் இலக்கணமாவது,—வாதி கூறிய ஏதுவே அவன்கூறும் துணிபொருளிலுள்ள விசேடம் இல்லையாமாறு சாதித்தற்கு உரியதாயிருத்தல்' என்றவாறு. [இவ்விலக்கணவாக்கியம் நியாயப்பிரவேசத்தில் இல்லை.]

'தன்மவிசேடவிபரீதசாதனம்' என்றது அதன் இலக்கணத்துக் காயிற்று. சாத்தியதன்மம் - துணிபொருள். சாதித்தல் - சாதித்தற்கு உரியதாயிருத்தல் என்னும் பொருள்பட நின்றது. இது இலக்கணைச்சொல்.

இனி, இதன் உதாரணம் வருமாறு:—

"கண்முத லோர்க்கு மிந்திரி யங்க
ளெண்ணிற் பரார்த்தந் தொக்குநிற் றலினாற்
சயனா சனங்கள் போல" (உகூஉ—உகூச)

என்பது.

இதன்பொருள்: 'கண்முதலிய போகசாதனமான சரீரேந்திரியங்கள் ஆராயுமிடத்துத் தம்மின் வேறாயுள்ள பரனுக்குப் பயன்படுதற்குரிய போகசாதனங்களாயுள்ளன; பலவாய்க் கூடிநிற்றலால்; பஞ்சணைமெத்தையும் சிங்காசனமும் போல' என்பது.

இதனுள், சரீரேந்திரியாதிகள் பக்கம். அவை பரார்த்தமாதல் துணிபொருள்; இது தன்மம். தொக்குநிற்றல்-பலகூடிநிற்றல். இது ஏதுப்பொருள். சயனாசனங்கள்-திட்டாந்தப்பொருள். சயனாசனங்கள்போலும் என்ற திட்டாந்தத்தின் பொருட்குறிப்பாலும், ஓர்க்கும் என்னும் இந்திரியவிசேடணத்தாலும் போகசாதனமாயுள்ள

என்னும் விசேடணம் வருவித்துரைக்கப்பட்டது. 'ஓர்க்குமிந்திரியம்' எனக் கருவி கருத்தாவா யுபசரிக்கப்பட்டது. ஓர்த்தற்குக் கருவியாகிய இந்திரியங்கள் என்றபடி. பரார்த்தம் - தனக்குப் பயன்படாது பிறர்க்கே பயன்படுதற்குரியது. இது சாதியொருமை. தொக்குநிற்றல் - பல கூடிநிற்றல்;—அது அவயவக் கூட்டங்களாற் பிறர்க்கே பயன்படுதற்குரியதாய் ஆக்கப்பட்டிருத்தல். சரீரேந்திரியங்கள் அவயவக்கூட்டங்களால் ஆக்கப்பட்டனவென்பது நியாயநூன்முடிபு. சயனாசனங்களும் அவயவக்கூட்டமுடையவாயாக்கப்பட்டிருத்தல் ஒப்புமை.

இதனால், கண்முதலிய இந்திரியங்களுக்குப் பரமாய் ஒருஆன்மா உண்டென்று சித்திக்குமாயினும், இது விபரீதசாதனமாகுமென்று இவ்வுதாரணத்துள்ள குற்றம் இன்னதெனக் காட்டி விளக்கப்படும்.

அவ்விளக்கம் வருமாறு:—

"......................என்றாற்
றொக்கு நிற்றலி னென்கின்ற வேதுச்
சயனா சனத்தின் பரார்த்தம் போலக்
கண்முத லிந்தியங் களையும் பரார்த்தத்திற் சாதித்துச்
சயனா சனவா னைப்போ லாகிக்
கண்முத லிந்தியத் துக்கும் பரனைச்
சாதிக் கிறநிர வயவமா யுள்ள
வான்மா வைச்சா வயவ மாகச்
சாதித் துச்சாத் தியதன் மத்தின்
விசேடங் கெடுத்த வின்விப ரீதம்" (உகூச — ௩0௩)

என்பது.

இதனுள், என்றால் என்றது வாதிகூறிறுன உதாரணத்துள்ள குற்றம் காட்டுதற்கு அவ்வுதாரணத்தை அநுவதித்துக்கொண்டமைதோன்ற நின்றது.

'தொக்குநிற்றலின் என்கின்ற வேது' என்றது கண்முதலிய இந்திரியங்கள் பரார்த்தப்பொருள் என்று சாதித்தற்கு வாதிகூறிய வேது என்றவாறு.

என்கின்ற எனச் செயப்படுபொருள் செய்ததுபோலக் கூறப்பட்டது.

'தொக்குநிற்றல்' அவயவக்கூட்டத்தால் ஆக்கப்பட்டிருத்தல்.

'சயனாசனத்தின் பரார்த்தம்போல' என்றது சயனாசனங்கள் பரார்த்தப்பொருளாவதுபோலும் என்றவாறு; பரார்த்தப்பொருள் தனக்குப் பயன்படாது பிறர்க்கே பயன்படும் பொருள்.

'சயனாசனத்தின்' என்னும் இன் அல்வழிச்சாரியை. இராகுவின்தலை என்பதுபோல ஒற்றுமைப்பொருளில்வந்த வேற்றுமைச் சாரியையெனினும் அமையும்.

'கண்முதலிந்தியங்கள்' என்றது ஓர்க்கும் என்னும் அடைமொழியால், சரீரத்தையும் அகப்படுத்திநின்றது; சரீரமும் இந்திரியக்கூட்டமாய் ஓர்த்தற்குக் கருவியாயமைதலின்.

'ஓர்க்கும்' எனக் கருவி கருத்தாவாயுபசரிக்கப்பட்டது. இந்திரியம்—இந்தியமென வடமொழிச்சிதைவாயிற்று.

'பரார்த்தத்திற் சாதித்து' என்றது பிறர்க்கே பயன்படுதற்குரிய பொருள்களின்கூட்டத்துட் பொருந்தியனவாகச் சித்திபெறச் செய்து என்றவாறு.

அங்ஙனம் சாதிக்குமாறு:— இந்திரியங்கள் பிறர்க்கே பயன்படும் பொருட்கூட்டத்துட் சேர்ந்தன. (இது பிரதிக்கினை). அவயவங்களின்கூட்டத்தால் ஆக்கப்பட்டிருத்தலால் (இது வேதுவசனம்). யாது யாது அவயவங்களின்கூட்டத்தால் ஆக்கப்பட்டிருப்பதோ அது அது பிறர்க்குப்பயன்படுவதாயுள்ளது (இது வியாத்தி

வசனம்); பஞ்சணைமெத்தையும் சிங்காசனமும்போல் (இது திட்டாந்தவசனம்). என்பது.

இதனால் அவயவக்கூட்டத்தால் ஆக்கப்பட்டிருக்கும் சயனாசனங்கள் தம்பொருட்டாகப் பயன்படாது பிறர்பொருட்டாகவே பயன்படுவனபோல, அவயவக்கூட்டங்களால் ஆக்கப்பட்டிருக்கும் சரீரேந்திரியங்களும் தம்பொருட்டாகப் பயன்படாது பிறன்பொருட்டாகவே பயன்படுவன என்பது பெறப்படும்; பெறவே சரீர இந்திரியாதிகளைத் தன்பொருட்டாகப் பயன்படச்செய்துகொள்ளும் பிறனாயுள்ள ஒரு ஆன்மா உண்டென்று சித்திக்குமாறு காண்க.

இங்ஙனம் இவ்வேது, சரீர இந்திரியங்களுக்குப் பரனாய் ஒரு ஆன்மா உண்டென்று சாதிக்குமாயினும், அது பிறிதோராற்றால் விருத்தம் என்னும் குற்றமுடைத்தாம் என்று காட்டப்படுகிறது: 'சயனாசனவானைப்போலாகி' என்று தொடங்கி.

'சயனாசனவானைப்போலாகி' என்றது சயனாசனங்களுக்குப் பரனாய் அச் சயனாசனங்களாலுண்டாகும்போகத்தையனுபவிக்கும் போக்தாவாயுள்ளவன் அவயவங்களுடன்கூடியிருப்பதுபோல என்றவாறு.

'போலாகி' என்றது போலவென்னுந்துணையாய்நின்றது. ஆகி ஆய், சாதிக்கிற என இயையும்.

பரனாய் - பரனாமாறு. சாதிக்கிற - சாதிக்கப்படுகிற.

'நிரவயவமாயுள்ள ஆன்மாவை' என்றது வாதிக்கு உடம்பட்டான ஆகாயம்போல நிரவயவத்தன்மையுள்ள ஆன்மாவை என்றவாறு. நிரவயவம் - ஓரவயவமுமில்லாதது.

இந்திரியங்களுக்குப் பரனாயுள்ள ஆன்மாவைச் சாவயவமாகச் சாதிக்குமாறு:—

'கண் முதலிய இந்திரியங்கள் சாவயவபுருடற்குப் பயன்படுவன; அவயவக்கூட்டத்தா லாக்கப்பட்டிருத்தலால்; யாது யாது அவயவக்கூட்டத்தா லாக்கப்பட்டிருப்பதோ அது அது சாவயவ புருடற்குப் பயன்படுவது; சாவயவபுருடராகிய சைத்திர மைத்திராதிகளுக்குப் பயன்படும் சயனாசனங்கள்போல' எனவரும்.

சாவயவமாக - அவயவத்துடன் கூடியதாக. சாதித்து - சித்திபெறச்செய்து. இது கருவி கருத்தாவாக உபசரிக்கப்பட்டது.

'சாத்தியதன்மத்தின் விசேடங் கெடுத்தலின் விபரீதம்' என்றது இங்கு வாதி துணியக்கருதிய சாத்தியதன்மமாகிய இந்திரியங்களுக்குப் பரமாய்ச் சொல்லப்பட்ட ஆன்மாவி லுள்ள விசேடமாகிய நிரவயவத்தன்மையைப் போக்கிச் சாவயவத்தன்மையாக்கிக் கெடுத்தலால் தன்மவிசேடவிபரீதசாதனமாயிற்று என்பதாம்.

சாத்தியதன்மமெனினும் தன்மமெனினும் ஒக்கும். அது இங்குப் பரம் என்னும் சொல்லாற்றுணியக்கருதிய ஆன்மா. அதன்கண்ணுள்ள விசேடம் நிரவயவத்தன்மை. அதனைக் கெடுத்தலாவது.—அது சாவயவப்பொருளாகுமாறு துணிதற்குரியதாதல். விபரீதம் மாறுபட்டது விருத்தம் என்பன ஒருபொருட்சொற்கள்.

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

ஸ்ரீ:

விபீஷண சரணாகதி

[மதுரைத் தமிழ்ச்சங்கக் காரியதரிசியும்
பிரபல வழக்கறிஞரும் தமிழ்வித்வானுமாகிய பிரமஸ்ரீ
N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் (B.A., B L.,) அவர்கள்.]

இந்தியமக்களின் அரிய பெரிய நூல்களில் இராமாயணம் மிகச்சிறந்தது. வேதத்தால் அறியும் பரம்பொருள் தசரதன் மகனாகப்பிறந்ததும், வேதம் வருணகுமாரனாகிய வால்மீகியிடமிருந்து இராமாயணமென்னும் பெயருடையதாயது என்பர் பெரியோர். வேதங்களில் பரம்பொருளின் தன்மையையும் அப் பரம்பொருளையடையும் வழிகளையும் சொல்லும் பகுதிகளுக்கு உபநிஷத்துக்கள் என்று பெயர். அவைகள், கர்மம் ஞானம் பக்தி ப்ரபத்தி (சரணடைதல்) ஆகிய நான்குமார்க்கங்களையும் வகுத்துக் கூறுகின்றன. அதுபோல் இராமசரித்திரமும் அவைகளைச் செவ்வனே வகுத்துக்கூறுகின்றது. ஆனால் வேதம் ஒழுக்கத்தை இருவகைப்படுத்துக் கட்டளைகளாகவும், கடமைகளாகவும் நன்மை தீமைகளை விளைவிப்பவைகளாகவும் வேறுபடுத்திக் கூறிப்போகும். அதனடியாய்ப்பிறந்த இராமாயணம் முதலான இதிகாசங்கள், அவ்வுண்மைப்பொருள்களின் மெய்ந்நெறியில் நின்ற பெரியோர்களின்சரித்திரங்களையும், அதனால் அவர்களடைந்த பெரிய லாபங்களையும், அவைகளினின்று வழுவிய அறிவிலிகளின் போக்கையும், அதனால் அவர்களுக்கு நேர்ந்த கேட்டையும் ஒழுக்கவேறுபாட்டின்பாற்படுத்தி விளக்கும். உலகத்தார் ஒழுகும் நெறிகள், அவரவர் இயல்பு படிப்பு பழக்கம் மனப்பாங்குகளுக்குத் தகுந்தபடி பல்வேறாகவிருப்பதால் ஒவ்வொரு இதிகாசத்திலும் இத்தகைய பல்வேறுவகைப்பட்ட பாத்திரங்கள் உண்டு. அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான ஒழுக்கமுள்ளவராயிருப்பர். அவர்கள்பால் இம்மார்க்கங்களின் பாகுபாடுகளும் அவைகளைப் பின்தொடர்தலால் அடையும் பலனும் விளங்கும். அதனுடன் ஒவ்வொருவருடைய நடத்தையும் மனப்போக்கும் ஆயுட்

காலசரித்திரமும், வாழ்வும் படிப்போருக்கு எடுத்துக்காட்டுக்களாகவும் உதவுகின்றன.

இவ்வித சரித்திரத்தை யுடையவர்களில் மிகவும் புண்ணிய சரித்திரத்தை யுடையவரான விபீஷணாழ்வார் தனதென்ற எல்லாவற்றையும் துறந்து இராமனுடைய அடியிணைகளைத் தவிர வேறு பற்றில்லை யென்று சரணடைந்த சரித்திரம் மிகவும் தூய்மை யுடையதென்றும் இதை இராமாயணத்தின் உபநிஷத்பாகமென்றும் பெரியோர்கள் கொண்டாடுவர்.

இது, 4-வது உபாயமான சரணாகதிசாஸ்திரத்தை விவரித்தலாலும், சகல சனங்களும் அதன் அங்கலக்ஷணங்களை யுணர்ந்து அநுஷ்டித்து இவ்வுலகிற் சகல செல்வங்களையும் பிறகு மோக்ஷபரியந்தமான லாபத்தையும் அடையக்கிடப்பதாதலாலும் நம் கம்பநாட்டாழ்வார் தாமியற்றியுள்ள இராமாவதாரத்தில் இதைப் பலபடியாக விளக்கியுள்ளார். இராமாயணத்தின் அடிமுதல் முடிவுவரை இந்தச் சாஸ்திரத்தின் ஞாபகம் தவறாமல் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சொல்லிவரப்பெறுகிறது. பல இடங்களில் உள்ளுறை பொருளாகவும் அமைந்துகிடக்கிறது. இதையே முக்கிய விஷயமாகச் சொல்லியுள்ள இடங்கள் விபீஷணனடைக்கலப்படலமும், கும்பகர்ணன்வதைப்படலமுமாம்.

விபீஷணனடைக்கலப்படலத்திற் சேதனனுடைய அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமான இடத்தில் பாபம்தோன்றுங்கால், நல்லுணர்வினால் அது தனக்கு விரோதியென்றும் அதை விட்டொழித்தலே தனக்கு நன்மையைப் பயக்கத்தக்கதென்றும் நிர்மாணிக்கவேண்டிய மனப்பாங்குமுதல் இறைவனடிப்புகுந்து அதனால் பெரும்பேறடைதலீறாகவுள்ள விஷயங்கள் முழுதும் சொல்லப்பட்டுள்ளன. அவைகளை விரிக்கிற் பெருகுமாதலாலும் அவைகளால் நன்மை தீமைகளின் ஸ்வரூப லக்ஷணங்களும், அவைகளை யறியும் ஆற்றலும், அதற்கு நல்லறிவுமிக்க பெரியாரைத் துணைக்கோடலும், தீயவை வெறுத்தலும், நன்மை கடைப்பிடித்தலும், இவைகளுக்கு ஹேதுவான நன்மையின் விசேடஸ்வரூபவிசாரமும்,

அந்நெறியில் தலைப்பட்டாருக்கு ஏற்படும் மனநிகழ்ச்சிகளும், பக்குவநிலையும், ஆர்வம்பொங்கி அன்புததும்பி, அவனடியிற் சேரும் அவாமேம்படுதலும், அநாதிகர்மவாசனையால் தான் இழைத்துள்ள வினைகளின் உணர்ச்சியும், அவன் அருள்புரிதற்குத் தான் இலக்கியமாகக்கூடுமோ என்னும் ஐயமும், எவ்விதத்திலும் அவனடிசேர்தலைத்தவிர வேறுசெயலால் எப்பேறும் கிடைக்கக்கூடாததை உணர்ந்தகையறுநிலையும், கடைசியாக அவனடிசேர்தலும் விபீடணனடைக்கலப்படலத்தில் "உத்தமன் அந்நகர் ஒழியப் போயினான்" என்பது தொடங்கிக் "கொற்றவசரண்" என்பதுவரையுள்ள 23 பாட்டுக்களாற் கூறுகிறார்.

அதன்பின் சேனைகாவலர் விபீடணன் அடைக்கலம்புகுதலை இராமனிடம் அறிவித்தலும், இராமன் தனக்கு உற்றாராயுள்ள வானராதியர்களின் நோக்கத்தை யறிதலுமாகிய நாடகம் நடக்கிறது. மற்றையோர் பிரகிருதிவாசனையால் வீடணனை ஏற்றுக்கொள்வதில் உள்ள நன்மைதீமைகளை உலகநியாயத்தாற் கூறப் பரத்வவாசனையில் தேறினவனான அனுமானை இராமர் பார்க்கிறார். இந்த வாசியை உணர்த்த 86ஆவது பாட்டில்,

"உறுபொருள் யாவரும் ஒன்றக் கூறினார்
செறிபெரும் கேள்வியாய் கருத்தென் செப்பென
நெறிதரு மாருதி என்னு நேரிலா
வறிவனை நோக்கினன் அறிவின் மேலுளான்"

என்றார். அதற்கு அனுமான் கூறும் விடையை 88 முதல் 105 ஈறாக 18 பாடல்களில் வைத்துளார். இவைகளை ஆசாரிய லக்ஷணம் என்னலாம். அவைகளைக் கற்குங்கால், தான் செய்யும் விஞ்ஞாபனம் பரமபுருஷனான சர்வேசுவரனிடத்திற் செய்வதென்பதும், எத்திறத்தினும் அடிசேர்ந்தாரை உய்வித்தலுக்கு அவன் இணங்காவிடில் உலகமே பற்றுக்கோடற்றுப்போய்விடும் என்னும் உணர்ச்சியும், அளவற்ற கருணையங்கடலாகிய அவனன்றி வேறொருவரால் அவ்வாறு உய்வித்தல் இயலாது என்பதும் இவைகள் போன்ற அளவிறந்த அரியபெரிய பொருள்கள் உள்ளுறைப்பொருள்களாகவும் வெளிப்படையாகவும் தெரிகின்றன. அவைகளிற் கடைசிப்

பாட்டான "ஆதலா லிவன்வரவு நல்வரவே" என்று தொடங்கும் பாடல்மட்டுமே ஒரு தனித்த அத்யாத்துமசாஸ்திரம் என்னலாம். அதில் ஈச்வரனுடைய சர்வஞ்ஞதைக்கும் பெரும்படிப்பாளிகளுடைய அல்பஞ்ஞதைக்கும் உள்ள வாசியும், ஞான அனுஷ்டானங்கள், சத் கைங்கர்யங்களில் அந்வயித்துப் பரமபுருஷன்பக்கலே செலுத்தப்பெறுதல்வேண்டும் என்பதும், அதனடியாகவே சித்தசுத்தியும் தத்துவஞானமும் உண்டாகும் என்பதும், அவ்வித நன்னெறியிலுள்ள ஆசாரியர்களையே தேடியடையவேண்டுமென்பதும் இன்னும் அரிய பெரிய பல பொருள்களும் அறியக்கிடக்கின்றன. அதன்பின் வருவன: சரணாகதர்பால் பகவான் கொண்டிருக்கும் சத்ய சங்கல்பமும் விபீஷணன்பெறும் ரக்ஷணமும் இலங்கையரசாள விபீஷணனுக்கு முடிசூட்டுதலுமாகிய வைபவங்கள். கர்ம, ஞான, பக்தி, மார்க்கங்களைக்காட்டிலும் சரணாகதி மிகவும் உயர்வுள்ளதென்பதைக் கடைசிப்பாட்டில் வைத்து அந்தப் படலத்தை முடித்துக்கொள்ளுகிறார். இது சிரேஷ்டோபாய நிர்த்தாரணம்.

ஆனால் சரணாகதியிலுள்ள ருசியும், அதன் பயனும் கம்பர் மனதைவிட்டு அகலவில்லை. அதற்காகப் பத்துப் படலங்கள் கடந்து கும்பகர்ணன்வதைப்படலத்தில் மறுபடியும் இவைகளையெல்லாம் நினைவூட்டுகிறார். கும்பகர்ணனைப் பார்த்தவுடன் இராமனுக்கு இவனும் சரண்புகுந்தால் காப்பாற்றிவிடலாமென்று தோன்றுகிறது. தன் கருத்தை அவனிடமுரைக்க வீடணனையனுப்புகிறார். அவனைக் கண்டவுடன் கும்பகர்ணன் நற்கதியடைந்த இவன் தீயோராகிய நம்பால் ஏன் மீளவருகிறான் என்று திடுக்கிடுகிறான். அப்போது கண்ணீரைப் பெருக்குகிறான். அக்கண்ணீரிலுள்ள பாவங்கள் பல. தம்பி என்னும் பரிவு, உயர்பதவியிற் சென்றதனாலாய அன்பு, அதை இழக்கத்தலைப்பட்டானே என்னும் துக்கம் முதலியன. மனதில் இவையெல்லாம் ஒருங்கே நிகழவல்லனவென்பதும் அறியக்கிடக்கின்றது. கண்ணீர்பெருகக் கும்பகர்ணன், "உய்ந்தனையொருவன் போனாய்" என்னும் அடிதொடங்கி 9 பாட்டுக்களால் தன் கருத்தை உணர்த்துகிறான். அவைகளில் சரணாகதன் லக்ஷணமும், சரண்கொள்பவராகிய பகவான் சங்கற்பமும், அதைச் செய்வதால் எல்லாவிதத்தாலும் சரணாகதனுக் கேற்படும் மாறுதல்களும், ரக்ஷணத்துக்காக அவன் செய்யும் உபாயங்களும் மற்றும் பலவிதப் பயன்களும் விரவிக்கிடக்கின்றன. இதைக் கேவலம் சாஸ்திரதர்மமாக மட்டில் உணர்ந்து அனுஷ்டிக்காமல் விட்டவனாகிய கும்பகர்ணன் சொன்னது போதாதாம். ஆதலால் அதை அனுஷ்டித்துப் பயனை நுகரும் வீடணன் ஒரு பாட்டால் அப்பயனை மறுபடி சொல்லுகிறான். பின்னால் பிறவியினாலும் ஸம்ஸ்காரங்களாலும் ஏற்பட்ட பற்றுத்தான் சகல தீங்குகளையடைதற்கும் நல்வழிப்படாமைக்கும் காரணமென்றும் அவைகளை விட்டாலன்றி நன்னெறிச்செல்லமுடியாதென்றும் அவ்விதம் விடவேண்டிய அவசியமும் இன்னும் பல அரிய பெரிய பொருள்களும் அடங்கிய 14 பாடல்களால் சரணாகதி செய்வதற்கு அடிப்படையாகவுள்ள சேதனனுடையஉள்ளம் திருந்தவேண்டிய முறையும் அதற்குள்ள இடையூறுகளும் அவைகளைக் கடிந்து மனமெழுவதற்குரிய சாதனங்களும் நியாயங்களும் உதாரணங்களுடனும் அனுஷ்டித்தவர்களுடனும் சொல்லப்பெறுகின்றன. இவ்விதம் சரணாகதிசாஸ்திரத்தின் சகல தத்துவங்களையும் சேகரித்து நமக்கருளிய கம்பநாட்டாழ்வார்பெருதவிக்குத் தமிழகம் என்றும் கடப்பாடுடையதாகும்.

1936-௵ ஜனவரி ௴ 11௳ (யுவ-௵ மார்கழி ௴ 27௳) பகல் 12-மணிக்கு, தல்லாகுளத்தில் இராமநாதபுரம் மஹாராஜா அவர்கள் பங்களாவில் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம் ராஜா R. ஷண்முகராஜேசுவர நாகநாதஸேதுபதிமஹாராஜா அவர்கள்,—அக்கிராசனாதிபதி.
2. மகா-ள-ள-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A., B.L., M.L.O., —உப-அக்கிராசனாதிபதி
3. ,, V. சுந்தரமையரவர்கள் B.A., B.L.
4. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்

தீர்மானங்கள்.

I. 1935-ஆம் ௵ செப்டம்பர் ௴ முதல் டிசம்பர் ௴ முடிய உள்ள வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய (1) ஸ்ரீவானமாமலைமடம் ஆஸ்தான வித்வான் தென்திருப்பேரை ஸ்ரீ அனந்த கிருஷ்ணையங்காரவர்களையும், (2) உத்தமபாளையம் போர்டு அனுமந்தன்பட்டி மகா-ா-ா-ஸ்ரீ அ. ச. கிருஷ்ணசுவாமி ஐயங்காரவர்களையும் அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

III. சங்கப்பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரை அணு வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

IV. (a) மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் போட்டுவைத்துள்ள ரூ. 25,011—5—0யும் ஷை டிபாஸிட்டின் வாயிதா முடிவடைகிற 31—1—36 முதல் இரண்டு வருஷங்கட்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 100-க்கு ரூ. 3½ வட்டிக்கு மறுபடியும் Fixed Depositல் போட்டுவைக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

(b) மதுரை இந்தியன்பாங்கில், மூன்று Fixed Depositகளில் இரண்டுவருஷ வாயிதாவுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 100-க்கு ரூ. 3½ வட்டிக்கு ரூ. 25,000ம் ஏற்கனவே போட்டிருப்பதை அங்கீகரிக்கலாயிற்று.

V. சங்கம் அச்சாபீஸில் வேலைசெய்துவரும் கம்பாஸிட்டர் P. திருப்பதி சேர்வைக்கு மாதச்சம்பளம் ரூ. 8 லிருந்து ரூ. 10-க்கு உயர்த்தப்பட்டிருப்பதையும், கம்பாஸிட்டர் ஒருவன் ஸ்தானத்தில் P. கருப்பையாவை மாதம் 10 ரூ. சம்பளத்தில் நியமித்திருப்பதையும் அங்கீகரிக்கலாயிற்று.

VI. இச்சங்கத்தின் கௌரவகாரியதரிசியாகப் பலவருஷங்கள் இருந்தவரும், சிதம்பரம் அண்ணாமலை ஸர்வகலாசாலை ஸெனேட்டில் ஒருமுறை சங்கத்தின் பிரதிநிதியாயிருந்தவரும், சங்கசம்பந்தமாகவும் தமிழ்க்கல்விசம்பந்தமாகவும் மிகவும் அரியகைங்கரியம் செய்தவருமான மகா-ா-ா-ஸ்ரீ ராவ்சாஹிப் M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் காலஞ்சென்றமையால் ஏற்பட்ட கஷ்டத்தையும் அநுதாபத்தையும் சங்கத்தார் ரிக்கார்டில் பதிவுசெய்தார்கள். இவ்விஷயத்தை, துக்கத்தில் மூழ்கிய ஷையாரின் குடும்பத்தாருக்குத் தெரிவிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

மதுரை.
11—1—'36.

R. Shanmuga Rajeswaran,
அக்கிராசனுதிபதி.

உ

சில ஆராய்ச்சி.

க. தொல்காப்பியச் சொல்லதிகாரத்து வேற்றுமைமயங்கியலில் 'முதலிற்கூறும் சினையறிகிளவியும்' என்னும் கக௪ ஆம் சூத்திரத்துச் சேனாவரையருரையுள் ' "அன்மொழித்தொகை எச்சவியலுள் உணர்த்தப்படுதலின் ஈண்டுக் கூறல்வேண்டா" எனின்;— அன்மொழித்தொகை தொகையாதலுடைமையான் ஆண்டுக் கூறினார். இயற்கைப்பெயர் ஆகுபெயரெனப் பெயர் இரண்டாயடங்கும்வழி ஒருபெயர்ப்பட்டதென மேலும் வந்தவாறு கண்டுகொள்க. அன்மொழித்தொகை எச்சவியலு ளுணர்த்தப்படும். அதனால் அவ்வாகுபெயராதலுடைமைபற்றி ஈண்டுக் கூறினார். எச்சவியலுட் கூறப்பட்டவாயினும் வினையெச்சமுதலாயின வினைச்சொல்லாதலும் இடைச்சொல்லாதலுமுடைமையான் அவற்றை வினையியலுள்ளும் இடையியலுள்ளும் கூறியவாறுபோல வென்பது' என்னும் உரைவாக்கியம் தொடர்பின்றிக் காணப்படுகிறது. அன்றியும், 'ஒருபெயர்ப்பட்டதென மேலும் வந்தவாறு கண்டுகொள்க' என்பதில்—மேலும் என்று குறிக்கப்பட்டஇடம் யாது என்பது புலப்படவில்லை. சூத்திரத்துள் இருபெயரொட்டும் என்பதையே சுட்டியதாயின் ஈண்டுக் 'கூறினார்' என்னும் வாக்கியமிருக்கவே அங்ஙனம் சுட்டலும் சிறப்பின்றாகும். பழைய ஏட்டுப்பிரதியை நோக்கியெழுதிய கையெழுத்துப்பிரதியொன்றில் 'ஒருபெயர்ப்பட்டதென மேலும் வந்தவாறு கண்டுகொள்க' என்பது, 'ஆகுபெயர்ப்பட்டதன்மேலும் வந்தவாறு கண்டுகொள்க' எனக் காணப்படுகிறது. அதனைநோக்கும்போது அது பொருத்தமாகக் காணப்படுகிறது. ஏனெனில் 'அன்மொழித்தொகை ஆகுபெயர்ப்பட்டு அதன்மேலும் (ஆகுபெயர்மேலும்) வந்தவாறு கண்டுகொள்க' என்னும் பொருள்பட நிற்றலின்.

உ. விளிமரபு க௪ ஆம் சூத்திர உரையுள் சேனாவரையர், ஆனீற்றளபெடைப்பெயர்க்கு உழாஅன், கிழாஅன் என உதாரணங்காட்டியுள்ளார். அங்ஙனம் ஆனீற்றிற்கு அவற்றை உதாரணமாகக் காட்டிய அவரே "ஆவோ வாகும் பெயருமா ருளவே, ஆயிடனறிதல் செய்யு ளுள்ளே" என்னுஞ் சூத்திரவுரையுள் 'உழாஅன்

கிழாஅன் என்பனவோவெனின் அவை அன்னீற்றுப்பெயர் ஒருமொழிப்புணர்ச்சியான் அவ்வாறு நின்றனவென்பது; ஆனீருய வழி உழவோன் கிழவோன் எனத் திரியுமாறறிக' எனக் கூறியுள்ளார். இச்சூத்திரவுரைகள் ஒன்றற்கொன்று முரணுகக் காணப்படுகின்றன. மேற்காட்டிய விளிமரபுச்சூத்திரத்திற்கு உதாரணமாக இளம்பூரணரும் கல்லாடனாரும் அழாஅன், புழாஅன் என்பவற்றையே உதாரணமாகக்காட்டியுள்ளார்கள். ஆதலின் அவர்களைப் பின்பற்றியே சேனாவரையரும் உதாரணங்காட்டியிருப்பாராதலின், சேனாவரையர் காட்டிய அழாஅன், புழாஅன் என்னு மூதாரணங்களையே, எழுதுவோர் உழாஅன், கிழாஅன் என முதலெழுத்துக்களைமாற்றி எழுதியிருப்பார்களோவென ஐயப்படவேண்டியிருக்கிறது. அழாஅன், புழாஅன் என்பன அழவோன், புழவோன் எனத் திரிந்ததில்லாமையானும், உழாஅன், கிழாஅன் என்பன உழவோன், கிழவோன் எனத் திரிந்துநிற்றலானும், அழாஅன், புழாஅன் என்பனவற்றையே உதாரணமாகக் காட்டியிருக்கலாமென்பது ஊகிக்கப்படத்தக்கது. நச்சினார்க்கினியரும், உழாஅன், கிழாஅன் என்பவற்றையே உதாரணங்காட்டி "ஆவோவாகும் பெயருமாருளவே" என்னுஞ் சூத்திரத்து அழாஅன், கிழாஅன் என்னும் அளபெடைப்பெயர் அளபெடுத்தலால் ஆவோவாகாவென்றுகூறுதலின், அவரும் ஆனீற்றளபெடைப்பெயருக்கு அழாஅன், புழாஅன் என்பனவற்றையே உதாரணங்காட்டியிருத்தல்வேண்டும். ஈண்டுப் புழாஅன் என்பது கிழாஅன் என மாறியிருக்கலாம். அல்லது ஈண்டு உழாஅன் கிழாஅன் என்பவற்றையே உதாரணமாகக்காட்டிச் சேனாவரையரை மறுத்திருத்தல்வேண்டும். இதனை யான் துணிந்துகூறவில்லை. வேறுகருத்து உண்டாயின் அறிஞர்கள் விளக்குவார்களெனக்கருதியே இங்கு எழுதலாயினேன்.

இதனையும், மேலதையும் ஏட்டுப்பிரதி வைத்திருப்போர் ஆராய்ந்து இச்செந்தமிழ்வழியாக வெளிப்படுத்தின் அது தமிழ் கற்போர்க்குச் செய்த பேருபகாரமாகுமென எண்ணுகின்றேன்.

சி. கணேசையர்.

உ

பாண்டியர் வரலாறு.

[௬௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

மாறவர்மன் குலசேகரபாண்டியன்I:—இவன் கி. பி. 1268முதல் கி. பி. 1311 வரையில் அரசாண்டவன். இவனைக் 'கோநேரின்மைகொண்டான்' எனவும் 'புவனேகவீரன்' எனவும் வழங்குவர். 'தேர்போல்' என்று தொடங்கும் இவனது மெய்க்கீர்த்தி இவனது வரலாற்றையறிதற்குச் சிறிதும் பயன்படாததாக இருக்கின்றது.

இவன்காலத்தில் பாண்டியராச்சியம் செழிப்புற்று உயர்நிலையிலிருந்தது. இவன் அரசாளும் நாட்களில் 'இத்தாலியா' நாட்டு 'வெனிசு'நகரத்தாளுகிய 'மார்க்கபோலோ' என்பவன் பாண்டிநாட்டிற்குவந்து பலநகரங்களையும் சுற்றிப்பார்த்து இவனது ஆளுகையைப் பெரிதும் புகழ்ந்து தன் நூலில் எழுதியுள்ளான். அவன், பாண்டிநாட்டிற்குத் தான் சென்றபோது அங்குப் பாண்டியர் ஐவர் ஆண்டுவந்தனர் என்றும், அவர்களுள் குலசேகரபாண்டியனே மூத்தவன் என்றும், அவன் தன் தலைநகராகிய மதுரையில் பெரும் பொருள் சேர்த்துவைத்திருந்தான் என்றும், அவனது உரிமைச் சுற்றத்தினர் சிறந்த அணிகலன்களைப் பூண்டுகொள்வது வழக்கம் என்றும், அவன் தன் இராச்சியத்தில் நடுவுநிலைமையுடன் செங்கோல்செலுத்திவந்தான் என்றும், வாணிபஞ்செய்வோராகிய பிறநாட்டுமக்களிடத்து அவன் பேரன்புடன் நடந்துவந்தமையின் அன்னோர் அவனது பாண்டிநாட்டிற்குப்போதற்குப்பெரிதும் விரும்பினர் என்றும் தன்குறிப்பில் வரைந்திருக்கின்றான்.

அந்நாட்களில், பாண்டிநாட்டிற்கு வந்த மகமதியனாகிய 'வாசப்' என்பானும் இவ்வேந்தனாட்சியை அங்ஙனமே புகழ்ந்துரைத்ததோடு இவன் தலைநகரில் ஆயிரத்திருநூறுகோடிப்பொன்னும் முத்துக்களும் வைத்திருந்தான் என்றும் குறித்துள்ளான்.

இவன்காலத்துப் போர்நிகழ்ச்சிகள், இவன் ஈழநாட்டின்மீது படையெடுத்ததும், சேரநாட்டிலுள்ள கொல்லத்தைக் கைப்பற்றியதுமேயாம்.

குலசேகரபாண்டியனும் அவன் தம்பிமார்களும் தம் படைத் தலைவர்களுள் மிகச்சிறந்தவனாகிய ஆரியச்சக்கரவர்த்தியின் தலைமையின்கீழ் ஒரு பெரும்படையை ஈழநாட்டிற்கு அனுப்பினர். அப்படை அந்நாட்டிற் பலநகரங்களையும் கோட்டைகளையும் அழித்துப் பொருள்களைக் கொள்ளையிட்டுப் புத்ததேவரது மாண்புவாய்ந்த பல்லையும் கைப்பற்றிக்கொண்டு வெற்றியுடன் பாண்டிநாட்டிற்குத் திரும்பிற்று. பாண்டியரோடு போர்புரிந்து அப்பல்லைப் பெறுதற்கு இயலாதநிலையிலிருந்த ஈழநாட்டுமன்னனாகிய மூன்றாம் பராக்கிரமபாகு என்பான் குலசேகரபாண்டியனைப் பணிந்து நட்புரிமை கொண்டு அதனைத் திரும்பப் பெற்றுச் சென்றனன்.*

இது கி. பி. 1284-ஆம் ஆண்டில் நிகழ்ந்ததாகும். இச்செய்தி இலங்கைச்சரிதமாகிய மகாவம்சத்திலும் சொல்லப்பட்டுளது. குலசேகரபாண்டியன் மலைநாட்டிலுள்ள கொல்லத்தைவென்று கைப்பற்றிக்கொண்டமையால், 'கொல்லங்கொண்டான்' என்ற பட்டமெய்தினன்.

சோழநாட்டிற் பல இடங்களில் இவன் கல்வெட்டுக்கள் காணப்படுதலால் இந்நாடுமுழுவதும் இவனது ஆட்சிக்குட்பட்டிருத்தல் வேண்டும் என்பது நன்கு புலப்படுகின்றது. அன்றியும் இவனுக்கு முன்னர் அரசாண்ட சடையவர்மன் சுந்தரபாண்டியனது ஆளுகையின்கீழிருந்த எல்லாநாடுகளும் இவனுடைய ஆட்சிக்கும் உட்பட்டிருந்தன என்பது அவ்விடங்களிற் காணப்படும் இவனுடைய கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது.

மாறவர்மன் விக்கிரமபாண்டியனும்†, சடையவர்மன் சுந்தரபாண்டியன்‡ என்ற பெயருடைய இருவரும், சடையவர்மன் வீரபாண்டியனும் இவன்காலத்திருந்தனர் என்று வரலாற்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். (The Pandyan Kingdom page. 180) அவர்கள் எவ்வெப்பகுதிகளை ஆண்டனர் என்பது தெரியவில்லை.

---

* நான்காம் பராக்கிரமபாகுவினால் புத்ததேவரது பல்லிற்கு ஒரு பெருங்கோயில் பின்னர் அமைக்கப்பெற்றது. (Ancient Dekhan page 171.)

† இவனுடைய ஆட்சிக்காலம் கி. பி. 1283—1296

‡ முடிசூடியகாலம் கி. பி. 1276

இவ்வேந்தன்காலத்தில் மாவலிவாணராயன் என்ற பட்டமுடைய பல அரசியல்தலைவர்கள் பாண்டிநாட்டில் இருந்தனர் என்று தெரிகிறது.

குலசேகரபாண்டியற்குச் சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் என்ற இருபுதல்வர் இருந்தனர். இவர்களுள், சுந்தரபாண்டியன் பட்டத்தரசியின் புதல்வன்; வீரபாண்டியன் காதற்கிழத்தியின்மகன். இவ்விருவருள் வீரபாண்டியனே ஆண்மையும் வீரமுமுடையவனாகவிளங்கினான். இதனையுணர்ந்த குலசேகரபாண்டியன் தனக்குப்பின் தன் இராச்சியத்தை நன்கு பாதுகாத்து ஆட்சிபுரியவல்ல அரசிளஞ்சிங்கம் வீரபாண்டியனே என்று கருதி அவனுக்கு கி. பி. 1296-ல் இளவரசுப்பட்டங் கட்டினான். இராசமாதேவியின் மகனாகிய சுந்தரபாண்டியன் தன் தந்தையின் செயலைப் பெரிதும் வெறுத்தனன். இறுதியில் கி. பி. 1310ஆம் ஆண்டில் இவன் தன் தந்தையைக்கொன்று சில போர்வீரர்களின் துணைகொண்டு மதுரைமாநகரில் அரியணை ஏறினான். இளவரசுப்பட்டங் கட்டப்பெற்ற வீரபாண்டியன் தலைநகரைவிட்டு ஓடிவிட்டான். நாற்பத்துநான்கு ஆண்டுகள் பாண்டிநாட்டைச் சிறப்புடன் அரசாண்ட குலசேகரபாண்டியன் வாழ்நாள் இங்ஙனம் முடிவுற்றது.

[தொடரும்.]

T. V. சதாசிவபண்டாரத்தார்,
தமிழ்ப்பண்டிதர், வாணாதுறைஹைஸ்கூல்,
கும்பகோணம்.

ஸ்ரீ:

மதிப்புரை.

ஸ்ரீ ஸ்வயம்ப்ரகாசவிஜயம்:— இது, நாமக்கல்தாலூகா சேந்தமங்கலம், ஸ்ரீ தத்தகிரி குகாலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத். ஸ்வயம்ப்ரகாச ப்ரம்மேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளுடைய திவ்யசரிதமும் நல்லுபதேசங்களும் அடங்கிய அருந்தமிழ்ப் புத்தகமாகும். ஸ்ரீமத். வரகவி. திரு. அ. சுப்பிரமணிய பாரதியாரவர்கள் இதனைத் தேன்போலினிய தெள்ளியநடையில் இயற்றியுள்ளார்கள். ஸ்ரீமத். ஸ்வாமி துரியாநந்தா அவர்களின் பேரருட்செல்வத்தால் இது, பலரும் படித்துப் பயன்கொள்ளுமாறு அச்சேறி வெளிவந்துலவுகின்றது. ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி திராவிடவித்யாபூஷணம் டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்களும் இதற்கு அரியதொரு சிறப்புரை எழுதி உதவியிருக்கின்றனர்.

இப்புத்தகம் மூன்றுபகுதிகள் கொண்டது. முதற்பகுதி ஸ்ரீஸ்வாமிகளின் உண்மைவரலாற்றை மிக வியப்புண்டாகுமாறு விளக்குகின்றது. இரண்டாம்பகுதி ஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளிய 33 அரிய உபந்யாஸங்களை விரிய வெளியிடுகின்றது. மூன்றாம்பகுதி ஸ்வாமிகள் தம் சீடரின் 120 ஐயவினாக்களுக்கு விடையிறுத்தபான்மையைச் செவ்வனம் தெளிவிக்கின்றது. இவையேயன்றி, ஸ்வாமிகளின்குருவாய் விளங்கிய ஸ்ரீசதாசிவப்ரம்மேந்த்ர ஸரஸ்வதி அவர்களின் வைபவமும் ஸ்ரீபகவத்கீதாஸாரம் முதலியனவும் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன.

இம்மை மறுமை வீட்டின்பங்களின் நெறியறிந்துய்யும் நினைவுடைய ஆன்மாக்களுக்கு இஃது உறுதுணையாய் உதவவல்லது. ஒவ்வொருவர்க்கும் இப்புத்தகம் கைப்பெறுதல் அவ்வவர் புண்ணியப்பேறு என்றே கூற அமையும். ஏறக்குறைய 550 பக்கஅளவில் அழுத்தமான காகிதத்தில் அழகாக அச்சிட்டு உறுதியாகப் பைண்டுசெய்யப்பெற்ற இதன் விலை ரூபா 2—8—0. வேண்டுவோர் "விசாகவிஜயம் 26, சுபத்திராள் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை" என்ற விலாசத்திற் பெறலாம்.

பாரமைகாந்த்யம்:—இப்பெயர்கொண்ட அரியதொரு ஆராய்ச்சிப்புத்தகம் மைலாப்பூர் அட்வொகேட் ஸ்ரீ. உ. வே. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியால் எழுதப்பெற்றது. ஸ்ரீவைஷ்ணவ ஸமயக்கோட்

பாடுகளுள் முதன்மையான பகவத் தாஸ்யத்தில் மறந்தும் புறந்தொழாமணத்துடன் ஊன்றிநிற்கும் நிலைமையே பாரமைகாந்த்யம் என வழங்குவதாம். அத்தகைய நிலையின் விரிவான லக்ஷணம் இச் சிறுபுஸ்தகத்தில் த்ருடதரமான வடகலை தென்கலை ப்ரமாணங்கொண்டு ஆசிரியரால் நன்கு வ்யவஹரிக்கப்பட்டுள்ளது.

படிப்பவர்மனத்திற் பதியும்படி விஷயங்களை வெளியிடும் அத்யத்புதமான வாக்யசைலி இவ்வாசிரியரிடம் அஸாதாரணமாக அமைந்திருக்கிறது. இவ்வாராய்ச்சியால் ஆழ்வாராசார்யர்களின் அமேயமான ப்ரபாவத்தைக் கரதலாமலகமாகக் கண்டுகளிப்பதேயன்றி, ஸ்ரீவைஷ்ணவராயுள்ளார் ஒவ்வொருவரும் உணர்ந்து கடைப்பிடிக்கவேண்டிய உயர்நிலை இன்னதென்பதை மலையிட்ட தீபமென மனங்கொள்ளலும் ஆகும். ஆகவே வாசகர்களுக்கு இப் புஸ்தகத்தாலெய்தும் பயன் அளவினடங்குவதன்று.

இதன் சீர்மையை நன்கறிந்து ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் திருக்கோஷ்டியூர் ஸௌம்யநாராயணாசார்ய ஸ்வாமி சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் வாய்ந்த ஓர் அரிய பூமிகை எழுதி அநுக்ரஹித்திருக்கின்றனர். பகவத் கைங்கர்யரூபமாய் லோகோபகாரமான இது போன்ற க்ரந்தநிர்மாணம் பலவற்றைச் செய்யுமாறு இதன் ஆசிரியர்க்கு எம்பெருமான் திருவருள்புரியவேண்டும். இப்புஸ்தகத்தின் விலை அணா 8. வேண்டுவோர் "ஸ்ரீ. உ. வே. தி. ராமஸ்வாமி ஐயங்கார், அட்வொகேட், சித்திரக்குளம் மேலண்டை, மைலாப்பூர்" என்ற விலாசத்திற் பெறலாம்.

தமிழ்ப்பேரகராதி:—சென்னைச் சருவகலாசங்கப்பிரசுரமாகிய இவ்வகராதியின் தொகுதி VI, பகுதி IV இப்பொழுது வெளிவந்துவிட்டது. இன்னும் இரண்டொருபகுதியோடு இவ்வகராதிவேலை நன்கு நிறைவேறி முற்றுப்பெறுமென்று தெரிகிறது. வழக்கம்போலவே இப்பகுதியும் மிகச் சிறந்தமுறையிற் பதிக்கப்பட்டுள்ளது. இதில் 'விரற்புறப்பாடு' என்பது முதல் 'வைராக்கியஞ்சொல்லுதல்' என்ப திறுதியாகவுள்ள சொற்களுக்குத் தக்க மேற்கோளுடன் பொருளெழுதப்பட்டுவிளங்குகிறது. நூற்றறுபது பக்கங்கொண்ட இப்பகுதியின் விலை ரூ. 2—0—0. வேண்டுவோர் "Messrs C. Coomaraswamy Naidu & sons, George Town, Madras" என்ற விலாசத்திற் பெறலாம்.

தாதுவர்ஷ வாக்கியபஞ்சாங்கம்:— இஃது யாழ்ப்பாணத்துப் பருத்தித்துறைச் சோதிடப்புலவர் ஸ்ரீ. சோ. வைத்தியநாத சாஸ்திரிகளவர்களாற் கணிக்கப்பெற்றது. இதன் கணிதமுறை பலநூற்றூண்டு பாரம்பரியமாய் வந்த பெரியோர்நெறியைப் பின்பற்றியதென்று சொல்லப்படுகிறது. ஆகையால் ஏனையவற்றிற் காணவியலாத விசேடங்கள் பல இப்பஞ்சாங்கத்தில் அமைந்துள்ளனவாம். வைத்தியநாத தீக்ஷிதீயம் போன்ற பிரமாணங்களைக் கொண்டு விரத சிராத்தாதிகள் இதில் தெளிவாய் நிர்ணயிக்கப்பட்டு விளங்குகின்றன. மற்றும் சோதிடம் அறிவார்க்கு இன்றியமையாத எத்துணையோ பல அரிய விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. எண்பத்தெட்டுப்பக்கங்களில் மிக விரிவாக அச்சிடப்பட்ட இப்பஞ்சாங்கத்தின் விலை அணு 4. (சதம் 25). வேண்டுவோர் "ஸ்ரீமத் சோ. வைத்தியநாத சாஸ்திரிகள், கலாநிதியந்திரசாலை, பருத்தித்துறை, இலங்கை" என்ற விலாசத்திற் பெறலாம்.

தமிழ்த்தோண்டன் பொங்கல்மலர்: — இஃது இம்மதுரை நகரிற் சிலகாலமாக நிலவிவருகின்ற **தமிழ்த்தோண்டன்** என்னும் வாரப்பத்திரிகையின் தைப்பொங்கல் விசேடவெளியீடாகும். சுமார் 60 பக்கங்கொண்ட அழகிய புத்தகவுருவில் அச்சிடப்பட்ட இது தமிழறிஞர் பலர் எழுதிய அரிய கட்டுரைகளோடு மிளிர்கின்றது. இக்காலத் தமிழ்நாட்டு நாடகவரங்க நாரீமணிகள் பலரின் உருவப்படங்களும் வேறுசில சித்திரப்படங்களும் இதனை அலங்கரிக்கின்றன. மற்றும் பலவகையான விற்பனைப்பொருள்களின் விளம்பரப்பகுதியும் இதில் மலிந்து விளங்குவனவாம். ஆகலின் இஃது பண்டிதர் பாமரர் என்னும் பலதிறத்தார்க்கும் பயன்றருமாறு அமைந்துள்ளது. இதன் ஆசிரியர் திருவாளர் வித்துவான் வ. மு. கனகசுந்தரம் அவர்கள் தம் தமிழ்ப்புலமையும் உலகியலறிவுங்கொண்டு ஆற்றிவரும் அருந்தொண்டின் பெருமை பாராட்டற்குரியதே. இப் 'பொங்கல் மல'ரின் விலை அணு 2. வேண்டுவோர் "திரு. வ. மு. கனகசுந்தரம் அவர்கள், பத்திராசிரியர், 'தமிழ்த்தொண்டன், மதுரை" என்ற விலாசத்திற் பெறலாம்.

சிந்தாமணி அல்லது காதலின்வெற்றி:— இது, சிங்கப்பெருமாள்கோவில், ஸ்ரீமத். க. ராமஸ்வாமி ஐயங்காரவர்களால் எழுதப்பெற்றதொரு நாடகம்.—இதனுள், சிற்றின்பமடுவில்மூழ்கிக் கரைகாணாது கிடந்த வொருசேதனன் பேரானந்தப்பெருங்கடலடைந்து பேரின்பப்பெருவாழ்க்கையெய்திய செய்தியை நுவல்பொருளாகக் கொண்டு, காமுகர் வேசையர் கள்வர் வேடர் வைதிகர் இடையர் முதலிய பாத்திரங்களால் அவரவரியல்பு புலப்படுதற்கேற்றவாறமைக்கப்பட்ட வாக்கியநடைகள் ஆங்காங்குச் சிங்காரம் ஹாஸ்யம் சோகம் அச்சம் முதலிய சுவைநயங்களும் பலவகைநீதிகளும் தோன்றுமாறு வரையப்பட்டிருப்பது பெரிதும் பாராட்டத்தக்கது. வேசையர்மீதுகொள்ளும் கழிபெருங்காதல் அறம் பொருள் இன்பங்களை அழித்து உற்றோர் பெற்றோர்களையும் ஒழித்துப் பெருந்துன்பக்கடலுளழுத்தும் என்பதும், நிர்க்கதியானவர் நற்கதியடைவார் என்பதும் நிதர்சனமாயறியும்படி விளங்குகின்றன.

இந்நாடகம், படிப்பவர் நடிப்பவர் பார்ப்பவர் கேட்பவர் எல்லோருக்கும் இனிமைபயக்கத்தக்கது; இதன் இடையிடையே சந்தர்ப்பத்துக்கேற்றவாறு ஆன்றோர்கள் பாடல்களினின்றும் மிகப் பொருத்தமுள்ளபாடல்களைத் தெரிந்தெடுத்துச் சேர்த்திருப்பது மிகவும் உவப்புறத்தக்கது; நாட்டிலுள்ள சாமானிய ஜனங்களுக்கும் ஆஸ்திகபுத்தியும் ஈசுவரபக்தியும் அளிக்கவல்லது. தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த மதிப்புரைபெற்றது. அம்மதிப்புரைகளாலும் இதன் அருமைபெருமை இனிது விளங்கும். இதன்விலை அணு 10. வேண்டுவோர், "க. ராமஸ்வாமி ஐயங்காரவர்கள், சந்நிதித்தெரு, சிங்கப்பெருமாள்கோயில், S. I. Ry. செங்கற்பட்டு ஜில்லா" என்ற விலாசத்திற் பெறலாம்.

அநுதாபக்குறிப்பு.

சென்ற ஜனவரி௴ 20௳ மாட்சிமிக்க ஐந்தாம் ஜார்ஜ் அரசர் பெருமான் இவ் வுலகவாழ்வுநீத்து 'வாராச்சேட்புலம்' படர்ந்தனர் என்ற செய்தி யார்க்கும் ஆராத்துயரம் விளைப்பதாகும். அதனால் உலகனைத்துமே ஒருங்கு துயர்க்கடலில் ஆழ்ந்துள்ள தென்பது மிகையாகாது.

இம் மன்னர்பிரான் 1865-ம் ஆண்டிற் பிறந்தவர். எட்வர்டு சக்ரவர்த்தியின் இளையபுதல்வரேயெனினும் அரசுவீற்றிருக்குந் திருப்பொறி இவர்க்கே உரியதாயிற்று. இளமைதொடங்கித் தந்தையாற் பயிற்சிபெற்ற இவர் தம் நாற்பத்தைந்தாம் பிராயத்தில் முறைசெய்து காப்பாற்றும் இறையென முடிசூடி விளங்கினர்.

இருபத்தைந்தாண்டின்மேலும் நிலவிய இவரது ஆட்சிக் காலத்து இடையிடை நேர்ந்த இடுக்கண்கள் பல. ஆயினும் அவ்வஞ் ஞான்று இவர் தம் ஆற்றலும் அளியும் தோற்றப்புரிந்து, 'மடுத்த வாயெல்லாம் பகடன்னான்' என்பதற் கிலக்காய்க் காவற்சாகாடினிதி னுய்த்த அருமை பெரிதும் போற்றப்படுகின்றது. அன்றியும், தொழிலாளரான ஏழைக்குடிகளுக்கு இவர் மிக்க துணையாளரா யுதவினவர் எனவும் புகழப்பெறுவர்.

நம் இந்தியமக்களிடத்தும் இவர் மேற்கொண்டிருந்த மாறாத பேரன்பு மறக்குந்தகையதன்றும். நனிசேய்த்தென்னாது நளிர் கடல்கடந்து பழம்பெரும்பதியாம் டில்லியில் பண்டு இவர் மணி முடிபுனைந்த மங்கலக்காட்சி யாவர்மனத்தையும் இறுகப் பிணித் திட்டது. சிலபல ஆண்டுகள்முன்னர்க் கொடிய பிணிவாய்ப்பட்ட இவர் நல்வாழ்வுபெறுவான் கடவுளைவேண்டி நாடெங்கும் ஒக்க வழிபாடாற்றிய செய்தி 'மன்னனுயிர்த்தே மலர்தலையுலகம்' என்ற ஆன்றோர்மொழிக்குச் சான்றெனநின்றது. அதுவேயன்றிச் சென்ற ஆண்டினும் இவர்க்கு வெள்ளிவிழாவணி விளங்கக்கண்டு உள்ளங் குளிர்ந்த நம் இந்தியநன்மக்கள் இப்பெருந்தகைவேந்தரின் பிரிவுத் துயரை எங்ஙனே ஆற்றவல்லுநராவர்?

பத்திராசிரியர்.

உ

இரங்கற்பாக்கள்.

[மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலையாசிரியர்

ஸ்ரீமத். சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் இயற்றியவை.]

தேசமெலாந் தினம்புகழுந் தனந்திகழும் இங்கிலாந் தென்னுந் தேசம்
பேசுமெலா நலமுமிகு லண்டன்மா நகரினிற்பேர் பெற்ற மேலோர்
நேசமெலாம் பெற்றுயர்ந்த இந்தியா நனிதழைய நிதிய மோங்கப்
பாசமெலாம் வைத்தாண்ட விக்டோர்யா மகாராணி பால னாகி. (க)

இந்தியா அரசாண்ட ஏழாம்எட் வர்டேனுஞ்சக் கரவர்த் திக்குப்
புந்தியா லுயரிரண்டாம் புதல்வனென வனுதினமும் புரிந்து போற்றி
வந்தியா வருமுவந்து வந்தியா நிற்பநலம் வாய்ந் தியாரும்
சிந்தியா நிற்குமீ ரொன்பானூற் றறுபத்தைந் தென்னச் செப்பும். (உ.)

நல்வருடத் தினிற்றோன்றி ஐந்தாம்ஜார்ஜ் என்னுமெழில் நாமம் பூண்டு
பல்வருட மிந்தியாச் சக்கரவர்த் திப்பதவி படைத்துப் பாரைச்
சொல்*வருடம் போற்காத்து வெள்ளிவிழாக் கண்டவெழிற் றுரையே யிந்த
வல்வருட நினையிழந்து மழையிழந்த பைம்பயிர்போல் வாடினோமே. (ங)

பட்டமெய்து முன்புகடற் படையின்மிகப் பயின்றுபுகழ் படைத்தாய் பின்பு
துட்டரைநிக் கிரகித்துச் சிட்டரைப்பா லித்துலகத் துயர்தீர்த் தானுஞ்
சட்டபரி பாலனஞ்செய் மகாமண்ட லேச்வரனுஞ் சக்ரவர்த்திப்
பட்டமும்பெற் றிந்தியா மிகவிளங்கப் புரந்தநின்சீர் பகரப் போமோ. (ச)

அணிதிகழும் நாற்பத்தைந் தாம்வயதி லிந்தியா வாட்சி யோங்க
மணிதிகழு முடிபுனைந்தா யிந்தியா வினில்டில்லி வந்தே நின்போற்
பணிதிகழும் பாரரசர் யாரேயிந் தியாவில்வந்து பட்டம் பெற்றார்
துணிதிகழும்ஐந் தாம்ஜார்ஜ்சக்ரவர்த்தித் துரையேயெந் துயர்காண் பாயே.

அயர்லாந்து முதலாய பலபலதே சத்தினர்கட் கருண்மீக் கூர்ந்து
சுயராச ரீகமளித் தனையதன்றித் தொழிலாளர் துயரா லுள்ளம்
அயராதன் னவர்ப்பரிந்த அண்ணலே யெழுபானுண் டவனி வாழ்ந்த
ஜயராஜ மகாயுத்த சமாதானம் புரிந்தநின்சீர் சாற்றற் பாற்றே. (ரு)

---

* வருடம் - மழை.

பத்தொன்பா னூற்றெடுமுப் பத்தாறும் வருடமதிற் பார்துன் பெய்துஞ்
சத்தொன்றச் சனவரியிற் றிகதியிரு பான்றிங்கள் சாரு நாளோ
முத்தொன்றார் கலிப்புவியி னினைப்பிரிந்து துயர்க்கடலில் மூழ்கு நாணின்
சித்தொன்றே றுயிரனைய மேரிமகா ராணியார் செங்கோல் வேந்தே. (௭)

சகமதனில் யாவருக்குந் தாழாது புவியாண்ட சார்வ பௌமன்
றகவுமிகும் ஐந்தாம்ஜார்ஜ் மன்னர்பிரான் பிரிவதனாற் சகிக்கொ ணாத
பகரரிய துயர்க்கடலி லழுந்துமனு தாபமதைப் பார்க்குத் தாயாம்
புகலரிய புகழ்மேரி மகாராணி யார்க்கியாம் புகல்கின் றேமே. (௮)

ஆதவனத் தமியாத வரசாட்சிப் பெருஞ் சிறப்பார் ஐந்தாம் ஜார்ஜ்
மேதகுமண் டலேச்சுவரன் பத்தொன்பானூற்றிறுடுமிகுநா லொன்பான்
ஓதுறுவற் சரத்துமுதன் மதியிருபா னிரவுமணி யொருபத் தொன்றும்
பூதவுடம் பினைநீத்துப் பூரணமா நிலையடைந்த புனித நாளே. (௯)

வற்சரம் - வருடம். முதன்மதி - முதல்மாதம், ஜனவரி. இருபான் - இருபது. 1936ம் வருடம் ஜனவரிமீ 20உ இராத்திரி மணி 11.

பொன்னின்மணி முடிதாங்கி யிந்தியாச் சக்ரவர்த்திப் பூப னாகி
யின்னரசு தனையேற்றிங் கிந்தநா னுலகாளு மிராச ராச
னென்னவரும் இனன்எட்டாம் எட்வர்ட்டுச் சக்ரவர்த்தி யினிது வாழத்
தன்னுயர்வொப் பில்லாதான் சரணசரோ ருகமெமது தலைக்கொள்வாமே.

தலைவன் அவள்நாட்டு அணியியல் வினாதல்.

181. பொன்னாட் டவர்பணி யெம்மான் சிராமலைப் பூங்கொடியென்
றன்னாட் டணியியல் யானுனக் கோதினென் சார்வதுநீ
நின்னாட் டணியிழை யார்பயில் காவலர் நேரிசைபா
மின்னாட் டணிசந்த மியாவு மெனக்கு விளம்புகவே. (௫)

தன்னாட் டணியியல் பாங்கி சாற்றல்.

182. தேடு வராகமுங் காணாச் சிராமலைத் தேவர்க்கன்பா
கூடுவர் கூடியெம் மூர்பயின் மாதர் குறிஞ்சியிசை
பாடுவர் பானலஞ் சூடுவர் பாநலம் பாவைவிளை
யாடுவர் காவினின் றாடுவர் காவிநின் றார்சுனையே. (௬)

இறைவிக்கு இறையோன் குறையறிவுறுத்தல்.

183. மாணா ரிடத்தினர் தென்கயி லாய வரையகத்தில்
பாணா ளனது குழலென மேகம் பயிலிருளில்
ஆணா தரிகரி தேருங் கடங்கடந் தன்பர்வரத்
தேனார் மொழியெனை வேண்டினர் யாதுன் றிருவுளமே. (௭)

நேராது இறைவி நெஞ்சொடு கிளத்தல்.

184. முன்னா ருளமுற முன்னார் சிராமலை மொய்த்தகடத்
தொன்னா ரெனக்கட நாகங்கள் சீய முறுபுலிகள்
மின்னார் மணித்தலை நாகங்க ளாரிருண் மேவியிவண்
என்னா ருயிரனை யார்வரு வாரொன் றியம்பனன்றே. (௮)

---

181. என்றன் நாட்டின் அழகிய இயலை. என் சார்வது - என்ன பயனுளதாகும். விளையாடுகின்ற காவையும் அலரையும் நேரே இசைக்கின்ற பாட்டுக்களையும் சந்தத்தையும் நீ விளம்புக; சந்தம் - சந்தனம்.

182. வராகம் - பன்றி. மாதர் ஒன்றுகூடுவர். குறிஞ்சியிசை - குறிஞ்சிப் பண். பானலம் - கருங்குவளைமலர்; அம்: சாரியை. பா நலம் பாவை - பரவிய நலத்தையுடைய பாவைகளை; நலப்பாவை: மெலித்தல். காவில் - சோலையில். காவி நின்று ஆர்ந்த; காவி - கருங்குவளைமலர். சுனையில் ஆடுவர்.

183. பால் நாள் - பாதியிரவு. ஆனாது - அமையாமல். அரி - சிங்கமானது. கரியைத்தேரும்; அரிகரி: இத்தொடர் ஓர் இரக்கக்குறிப்புப்போலவும் நின்றது; "அரிகரி, எற்பற்றிய நோ யெவ்வளவு" என்றார் ஒருவர். கடம் - காடு.

184. முன்னார் உளம் - தம்மைக் கருதாதவர்களுடைய உள்ளத்தை. கடத்து - காட்டில். ஒன்னாரென - பகைவரைப் போல. கட நாகம் - யானை. சீயம் - சிங்கம். மணித்தலை நாகம் - பாம்பு. நன்றே - நன்றாகுமா?

நேரிழை பாங்கியோடு நேர்ந்துரைத்தல்.

185. ஒட்டார் புரமுன மட்டார் சிராமலை யொண்ணுதலாய்
கட்டார் நிறமுற மட்டார் சுனையினிற் கட்டியெடுத்
திட்டா ரெனையொளி விட்டார் பகழி யிபந்தொலையத்
தொட்டா ரிரவுற விட்டா ருனையெனிற் சொல்லலென்னே. ()

நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குரைத்தல்.

186. பணிந்தும் புகழ்ந்து மிரந்தே னிரவினிற் பான்மொழிதான்
துணிந்துன் பணியினி னின்றிட நாடொறுந் தூயமலர்
அணிந்துந் துதிசெய்து மன்பருட் கூடி யமரரன்பால்
தணிந்துந் தொழவரு ளெம்மான் சிராமலைத் தார்மன்னனே.

தலைவனைப் பாங்கி குறியிடைநிறுத்தித் தாய்துயிலறிதல்.

187. பாகத்தை மாதுக் களித்தோன் சிராமலைப் பாசிழையாய்
மாகத்தை மேவும் பொழிலிற் றுயிலின்றி மல்கிருள்வாய்
நாகத்தை நாக மலைத்திட நாக நடுங்கவதன்
ஆகத்தை நூறு மயில்கட்சி மேலெழுந் தார்க்கின்றதே. (கக)

---

185. ஒட்டார் புரம் - பகைவருடைய ஊர்களை. கள் தார் நிறம் உற - கள்ளையுடைய மாலையை அணிந்த தம்முடைய மார்பை நான் அடையும்படி. மட்டு - வாசனை. நிறமுறக் கட்டி யெடுத்திட்டார். ஒளியை வீசி ஆர்ந்த பாணத்தை இபம் தொலையத் தொட்டார்; இபம் - யானை. இரவில் என்னை அடைதற்கு உன்னைத் தூதுவிட்டா ரென்றால். உடன்பட்டேதீரவேண்டு மென்றபடி.

186. பால்மொழி - தலைவியானவள். பான்மொழி உன்பணியில் நின்றிட இரந்தேன். அன்பருட் கூடியவர் அமரர். மன்னனே! இரந்தேன்.

187. மாகம் - ஆகாயம். நாகத்தை - சுரபுன்னையை. நாகம் அலைத்திட - யானை அலைப்ப. நாகம் நடுங்க - பாம்பு நடுங்க. அதன் ஆகத்தை - அப்பாம்பின் உடலை, நூறும் - அழிக்கும். கட்சி - கூடு. மயில் ஆர்க்கின்றது.

இறைவிக்கு இறையோன் வரவறிவுறுத்தல்.

188. கணையொன்று கூர்விழி மாதே சிராமலைக் கண்ணுதலோன்
இணையொன்று பாத மலர்நா டலரென வெண்ணமுற்றுப்
பணையொன்று காவி லசோகத்திற் சோகம் படர்ந்துடற்றத்
துணையொன்று மின்றிநம் மன்னவர் வாடலென் சொல்லுவதே.

குறியிடத்து இறைவியைக் கொண்டுசேறல்.

189. அளிதங்கு கானினைக் கார்பொழி கங்குலி னங்கைகொண்ட
ஒளிதங்கு வேல்வழி காட்டக் கடந்திங்ங னுற்றனர்தேன்
துளிதங்கு தாரின ரெம்மான் சிராமலைத் தூமொழிவா
களிதங்கு மோகை யவர்பெற யாஞ்சென்று காண்பதற்கே. ()

இறைவியைப் பாங்கி குறியிடத்து உய்த்து நீங்கல்.

190. கங்கையும் பாம்பு மிலைந்தோன் சிராமலைக் காவினின்சீர்ச்
செங்கையும்பார்வையுங்கொங்கையும்வாயுந்தெரித்திடல்போல்
கொங்கையுந் தேனையு மார்மலர் வாவியிற் கொண்டுசெல்வேன்
இங்கையுங் காதலு மேவநிற் பாய்கண மேந்திழையே. (கச)

தலைவன் குறியிடத்து எதிர்ப்படுதல்.

191. மாலா கமப்பொரு ளானோன் சிராமலை மொய்பொழில்வாய்ச்
சேலார் கயத்தம் புயத்திடை நின்றுஞ் செறியிருளின்
மாலாகு மென்றனைக் காத்தென தாகத்தில் வாழ்ந்திடவோ
பாலாகு மின்சொற் றிருநீ யிவண்வரு பான்மையதே. (கரு)

---

188. கணை ஒன்று - அம்பை ஒத்த. இணை - இரண்டு. காவில் - சோலையில். சோகம் படர்ந்து - சோகமானது பரவி; சோகம் - மன்மதனுடைய பாவ பாணம் ஐந்தனுள் ஒன்று. சோகம் உடற்ற. அசோகத்தினிற் சோகம் படர்ந்து என்பது ஒரு நயம். என் சொல்லுவது - யாதுசொல்லுவது.

189. அளி - வண்டு. கான் - காடு. கானினைக் கடந்து. தூமொழி: விளி. ஓகையை அவர் பெற. காண்பதற்கு வா.

190. மிலைந்தோன் - சூடியவன். செங்கை, பார்வை, கொங்கை, வாய் ஆகிய இவற்றை உனக்குத் தெரிவிப்பதுபோலத் தாமரைமலர், கருங்குவளை மலர், தாமரையரும்பு, செவ்வாம்பல் இவற்றைப் பறித்துக்கொண்டு வருவேன். ஐயும் - அழகும், தலைவனும். கணம் நிற்பாய்; கணம் - க்ஷணம்.

191. மாலாகும் - மயக்கமுடையேனாகிய, திருமாலாகிய. ஆகம் - மார்பு. திரு நீ - திருமகளாகிய நீ. நீ இவண் வரு பான்மை வாழ்ந்திடவோ? தலைமகளைத் திருமகளாகப் பாவித்துக் கூறியது இது.

தலைவி நெறியினதருமைநினைந் திரங்கல்.

192. மையா ரிருட்பிழம் பெங்கு மருவ மழைபொழியும்
மொய்யா ரிரவிடைக் கான்யாறுங் கானு முழைவரையும்
பையார் பணியணி தென்கயி லாயர் பதம்பரவும்
மெய்யா ருளத்தண்ண லெவ்வா றிகந்திங்கு மேவியதே. (கசு)

தலைவன் தலைவியைத் தேற்றல்.

193. நீதந்த காமக் கனலிரு ளுங்கிட நின்விழியாம்
ஏதந்த மாபல நூறிட வேதங்க ளின்றிவந்தேன்
தாதந்த தாவென வென்னுள மீதென்றுந் தானடிக்கும்
வேதந்த ளார்கழ லெம்மான் சிராமலை மெல்லியலே. (கஎ)

புணர்ச்சியின் மகிழ்தல்.

194. மாயா விகாரத்தி லுலறி வின்றி மயங்குமெற்குத்
தாயா யருள்புரிந் தாள்வோன் சிராமலைச் சாரலினின்
சேயா ரிதழமு துண்டிவ னான்பெற்ற சீர்கொளின்பம்
வேயார் வளையணி தோளிவிண் ணோர்க்கும் விளைவதின்றே. ()

---

192. இருட்பிழம்பு - இருளின் திரட்சி. மொய் - மொய்த்தல். முழை - குகை. பை - படம். தென்கயிலாயர் - சிரகிரிநாதருடைய. அண்ணல்: விளி. கான்யாறு முதலியவற்றைக் கடந்து மேவியது எவ்வாறு?

193. காமக் கனல் இருளை நுங்கிட; நுங்கல் - உண்ணல். விழியாம் ஏ - கண்களாகிய பாணங்கள். தந்தம் மா - யானை. நின் விழியாகிய பாணம் யானைகள் பலவற்றை நூறிட. ஏதங்கள் இன்றி - துன்பங்களில்லாமல். தா தந்த தா: இது தாளக் குனிப்பு. தன் ஆர்கழலை வேதமாகவுடைய எம்மான்.

194. எற்கு - எனக்கு. சேய் ஆர் - செம்மை பொருந்திய. இவன் நான் பெற்ற. வேயார் தோளி: விளி. இன்பம் விளைவதின்று.

புகழ்தல்.

195. புயமுற்ற பாரகங் காளர் சிராமலைப் பூங்கொடிநின்
நயமுற்ற வானனங் கண்வா யிவைகளை நாணியென்றும்
கயமுற்ற தாமரை காவிசெவ் வாம்பல்கள் கள்ளம்பட்டுப்
பயமுற்ற மாபங்க முற்றநன் னீருட் படிந்தனவே. (கசு)

தலைவனைத் தலைவி குறிவரல் விலக்கல்.

196. மணிமிக வாருஞ் சிராமலை நாதரை வாழ்த்தலர்போல்
கணிமிக வாருங் கடத்திடை யாளி களிறுபுலி
பணிமிக வாரும் புரவல நின்னிரு பங்கயமாம்
அணிமிக வாரும் பதம்வாட நீவர லாவதன்றே. (உ0)

தலைவன் தலைவியை இல்வயின் விடுத்தல்.

197. குருவே யெனவெனை யாண்டென் சிரத்தினிற் கோகனக
உருவே நிகர்பதம் வைத்தோன் சிராமலை யொண்ணுதலார்
திருவே கமல மலருனைத் தேடியென் செய்யுங்கொலோ
மருவே யலர்கொய்வ தென்செல்க நீகண் வளர்ந்திடவே. ()

---

195. கங்காளர் - முழு எலும்பை அணிந்தவர். பூங்கொடி: அண்மை விளி. ஆனனம் - முகம். கயம் - தடாகம், கீழ்மை. கள்ளம் - திருட்டுத் தன்மை, கள்ளாகிய நீர். பயம் - அச்சம், நீர். பங்கம் - பழுது, சேறு. தாமரை முதலியவைகள் நீருட் படிந்தன. இச்செய்யுளில் நிரல்நிறை, சிலேடை என்னும் அணிகள் அமைந்துள்ளன.

பி-ம். 'நாடியென்றும்'

196. ஆரும் - நிரம்பிய. கணி - வேங்கைமரம். கடம் - காடு. யாளி - அத்தியாளியென்னும் மிருகம். பணி - பாம்பு. கடத்திடை யாளிமுதலியவைகள் மிக ஆரும். பங்கயமாம் பதம்.

197. சிரத்தினில் பதம் வைத்தோன். சிராமலையிலுள்ள திருவே! நுதல் ஆர்ந்த திருவே! என்செய்யுங் கொலோ - என்ன செய்கின்றதோ; திருமகளாகப் பாவித்து இங்ஙனங் கூறினன். மரு எய் மலர் - மணம் பொருந்திய பூக்களை. கொய்வது என் - பறித்தல் என்ன பயனைக் கருதி. கண் வளர்ந்திட நீ செல்க.

பாங்கி இறைவியையெய்திக் கையுறை காட்டல்.

198. பானேர் மொழியுமை பாகன் றனைப்பணி பத்தருளத்
தேனே யனையவ னெம்மான் சிராமலைத் தேமொழியார்
மானே யுனைத்தனி விட்டேகி னேனெனும் வாட்டமென்னோ
கானே யலர்கொய்து வந்தே னணிக கவின்பெறவே. (உஉ)

பாங்கி தலைவியை இற்கொண்டேகல்.

199. தம்மனை வாழிடப் பாகர் சிராமலை தன்னினமர்
தெம்மனை வீட்டிடல் போன்மலர் கொய்தனஞ் சென்றிருளில்
அம்மனை நீல விழியம் புயங்கள் அலருமுன்னும்
நம்மனை மேவித் துயிலுவம் போதி நளினமின்னே. (உ௯)

பாங்கி இறைவனை வரவு விலக்கல்.

200. தந்தியைச் சீயந் தடிவனத் தேகித் தனித்தடவி
உந்தியைத் தாவி யிரவிடை நீயிவ ணுற்றிடிற்செவ்
வந்தியைப் போல்வடி வானேன் சிராமலை யன்னமன்னே
கந்தியைப் போன்மிடற் றெம்பெரு மாட்டி கலங்கிடுமே. ()

---

198. பால் நேர். பத்தர் உளத்தேனே அனையவன்; "கருதுவா ரிதயத்துக் கமலத் தூறும், தேனவன்காண்"(தே. திருநா. சிவபுரம்.) மொழி ஆர் - சொற்கள் ஆர்ந்த. வாட்டம் என்னோ - வாடுதல் யாதோ. கான் ஏய் - வாசனை பொருந்திய. கவின்பெற மலர்களை அணிக.

199. தம் மனை - தம்முடைய தேவியார். நமர் - நம்மவராகிய வேடர். தெவ் மனை வீட்டிடல் போல் - பகைவர் மனைகளை அழித்தல் போல. அம் மனை - தாய். தாய் விழித்துக்கொள்ளும்முன்னம் நாம் மேவித் துயிலுவம். போதி - வருவாய்.

200. சீயம் - சிங்கம். அடவி உந்தியை - காட்டினிடத்தே உள்ள ஆற்றை. செவ்வந்தியை - செவ்வானத்தை. சிராமலை தலைவனுக்கு உவமை. கந்தி - கமுகு. நீ இரவிடை இங்கே உற்றிடின் கலங்கிடும்.

தலைவன் மயங்கல்.

201. நாலா ரணந்தொழு தேத்துஞ் சிராமலை நன்னுதனீ
கோலார் வளையை யெனக்குயி ராகக் கொடுத்தமுதாம்
பாலார வூட்டினர் தாமே விடத்தைப் பரிந்தவர்க்கு
மாலார வூட்டுதல் போன்ற திராவரன் மாற்றியதே. (உரு)

தோழி தலைமகள் துயர்கிளந்து விடுத்தல்.

202. வம்பார் முலையுமை பாகன் சிராமலை வாழ்த்துமன்பா
அம்பார் தனுவுட னீயாளி வேழ மடுவனத்தைப்
பம்பா ரிருளிற் றணந்துநின் னூர்செல் பரிசுணர்த்துன்
கொம்பார் தருமொழி கேட்டா லுயுமெங் குலக்கொடியே. ()

திருமகட் புணர்ந்தவன் சேறல்.

203. பரவை மனையி லிரவினி லேகிப் பரிந்துநம்பி
வரவை யுணர்த்திய வெம்மான் சிராமலை வாணுதலாய்
இரவை யெனதுயி ரன்னாண் முகமதி யேயகற்றும்
அரவை யவளியல் வெல்லும் பதிசெல வஞ்சலனே. (உஎ)

கச. இரவுக்குறி இடையீடு.

இறைவிக்கு இகுளை இறைவரவு உணர்த்தல்.

204. கோதாரும் பாசந் தவிர்த்தெனை யாண்டவன் கோமளமாம்
சூதாரும் பூண்முலை பாகன் சிராமலைச் சூழலின்வாய்ப்
போதாரும் பான்மொழி மாதே யனமிருட் போதுமுற்றும்
தாதாரும் புன்னையிற் றுஞ்சா தரற்றின சார்ந்ததென்னே. ()

---

201. நன்னுதல்: விளி. கோல் ஆர் வளையை - தலைவியை; கோல் - திரட்சி. பாலை ஆர ஊட்டினர்தாமே - பாலை நிரம்ப ஊட்டியவர்களே. அவர்க்கு விடத்தை ஊட்டியது போன்றது. மால் - மயக்கம். நீ கொடுத்து இராவரல் மாற்றியது விடத்தை ஊட்டுதலைப் போன்றது.

202. வம்பு - கச்சு. அத்தியாளி யானையை அடுகின்ற. பம்பு ஆர் - பரவுதல் ஆர்ந்த. ஊர்சென்ற பரிசை உணர்த்துவாயாக. கொம்பு - ஒரு வகை வாத்தியம். குலக்கொடி கேட்டால் உய்வாள். கொம்பின் மொழி யைக்கேட்டு அதிற்படரும் கொடி உய்யுமென்பது ஒரு நயம்.

203. பரவை - பரவைநாச்சியார். நம்பி - சுந்தரமூர்த்திநாயனார். இரவை - இராத்திரியில் உள்ள இருட்டை. அரவை - பாம்பை. அவள் இயல் - அவளுடைய சாயலாகிய மயில்.

204. சூது - சொக்கட்டான்காய். போது - தாமரைப்பூவில். அன்னம் - அன்னப்பறவைகள். தாது - பூந்தாது. அன்னங்கள் அரற்றின.

தலைவி குறிமருண்டமை பாங்கிக் குணர்த்தல்.

205. குன்றே சிலையெனக் கொண்டோன் சிராமலைக் கோல்வளையாய்
நன்றேயெனதெண்ணம்புள்ளொலிகேட்டன்பர்நன்மணித்தேர்
என்றே யெழுந்து மகிழ்ந்து பொழிலிடை யெங்கணும்யான்
சென்றே யுழன்றிங்கு மீண்டே னடியிணை சேப்புறவே. (உ)

பாங்கி தலைவன் தீங்கெடுத் தியம்பல்.

206. ஒன்றா யளவி லுயிர்க்குயி ராயன்ப ருள்ளமலர்
மன்றா நடம்புரி யெம்மான் சிராமலை வாழ்த்தலர்போல்
குன்றாய் வளர்முலை யாலிடை யொல்கக் கொடியவன்பர்
நின்றாள் வருந்த வியற்றினர் பொய்க்குறி நேரிழையே. (ங)

புலந்தவன் போதல்.

207. நெஞ்சே யெனக்கென்று நீயே துணையென நின்னைநம்ப
அஞ்சே லெனாதெனைக் கானிலம் மின்பொருட் டாலலைத்து
நஞ்சே யமுதென வுண்டோன் சிராமலை நாதனருட்
செஞ்சே வடிநினை யாரெனச் செய்தது சீரியதே. (ச)

புலர்ந்தபின் வறுங்களம் தலைவிகண் டிரங்கல்.

208. எண்ணார் புரமட்ட வெம்மான் சிராமலை யேத்துமன்பர்
நண்ணா விரவிடை நண்ணின ரோவெழி னற்குவளை
கண்ணா வலர்கழி காள்புன்னை காள்கண்டல் காளுறையீர்
தண்ணார் பொழிலிடை யான்வந்து நாடித் தணந்தபின்னே. ()

---

205. எனதெண்ணம் நன்று; இகழ்ச்சிக் குறிப்பு. சேப்பு - சிவப்பு. சேப்புற மீண்டேன். "அணிகடற் றண்சேர்ப்பன் றேர்ப்பரிமாப் பூண்ட, மணியரவ மென்றெழுந்து போந்தேன் - கணிவிரும்பும், புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தே னொளியிழாய், உள்ளுருகு நெஞ்சினே னாய்" (ஐந். ஐம். 50) என்பதை நினைப்பிக்கின்றது இச்செய்யுள்.

206. உள்ளமாகிய மலரை மன்றாகக்கொண்டு. வாழ்த்தலர்போல் இடை ஒல்க. அன்பர் பொய்க்குறியை இயற்றினர்.

207. நம்ப-யான் நம்பியிருப்ப. அ மின் பொருட்டு - அந்த மின்னல் போல்பவளாகிய தலைவியின்பொருட்டு; அம் - அழகுமாம். ஆல்: அசை.

208. எண்ணார் - பகைவருடைய. அன்பர் - தலைவர். கண்டல்காள் - தாழைகளே. யான் நாடித் தணந்தபின் அன்பர் இரவிடை நண்ணினரோ.

விசயாபிடேகம் 784, 800, 811
விசயாலயன் 784
விசயானந்தரங்கன் 1355
விசாரிதன் 870
விசும்பிற்சுடர்மாட்டியதெய்வச்செயல் [5
விசும்பின்பிடர்த்தலை 294
விசுவநாதத்திருமலேந்திரன் 1272
விசுவநாதன்கோயில் 946
விசுவலோகத்தும் 783
விஞ்சத்தடவி 1304
விஞ்சை - நெட்டூர் 1295, 1298—9
விஞ்ஞாபனம் 1047
விட்டலதேவமகாராஜா பக். 606;—குமரிவரைபடையெடுத்தது 1245
விட்டலராசா 1245
விட்டலையன் 1245
விட்டிருத்தல் 890
விட்டில் உருவத்தின் உயிரிழப்பது [386
விடக்குமிசைதல் 321
விடங்கமூர்த்திகள் பக். 526
விடக்கு 1047
விடத்தேர் 841
விடந்தீரப் பாடிய வெண்பா 1624
விடியல்பதினெட்டாநாள் 1409—10
விடுத்தல் - ஒழித்தல் 250
விடுதி 1640
விடுமாற்றம் 492
விடுவருடம் 1259
விடைக்கொடி பல்லவர்க்கு பக். 534
விடைதழுவி மணத்தல் 700, 1141
விண்ணஞ்செழியக்குடி 890
விண்ணன் 168, 1152;—பழைசையில் அமைத்த சேதியம் 182
விண்ணவர் 1617
விண்ணு - விட்டுணு 170
விண்விருந்துசெய்தல் 474
வித்தகர் 310
வித்தின்றிப் பைங்கூழ்விளைத்தல் 342
வித்துவான்கள் 1337
வித்வச்சனர் 1348
வித்வஜனசேகரன் 1789
விதரணராமன் 1248
விதரணி 362
விதிர்ச்செட்டு (வார்) 1123
விதிர்த்தல் 692, 2148
விதியுளி 1549
விந்தத்தடவி 1474
விந்தத்தின்மிகைதீர்த்தவர் 1562
விந்தமான் 1178
விந்தனூர் பக். 591
விந்தை 938;—போர் 950
விநயவிச்சுருதன் 889
விநாயகமான்மியம் 1976
விநாயகர் பக். 22;— உமைவயிற்றிலுதித்தவர் 93;—ஓலையெழுதியது 1407-8; சிவனுருவமுடைமை 92, 95;—மலையாக உருவகம் 94, 95
விபவம் 1102
விபாடம் 928
விம்பசாரகதை பக். 54, 535
விம்மிதர் 866
விமானம் 1219
வியம் 2014, 2016
வியலிடம் 889
வியலூர் 1131, 2125
வியாதமுனிவரன் 1653
வியாழமாலை 1384
வியாழன் 1529
விரகா - புலவர் 364
விரதம் 1437
விரலாழி 1280
விரற்குக்காந்தண்முகை உவமை 112
விரற்சுட்டிப் பகைவர் கனத்தில் வீழ்தல் 112
விராதன் 1515
விரிச்சிவிலக்கிய வீரக்குறிப்பு 423
விரிச்சியோர்த்தல் 423
விரிசிலையாறு 1296, 1919
விரிஞ்சர் ஒன்பதின்மர் 1676
விருகையன்தேவி 786
விருத்தகிரி 1926
விருத்தியாளுதல் 393
விருதர்விக்கி 783
விருதன் 1756
விருதுகாளம் 1499
விருதுபந்தம் 1255
விருந்தம் 'வாசிவிருந்தம்' 892
விரும்பாதார் 490
விலையாதகண்டன் பக். 636
வில்லம்பு சொல்லம்புகள் 1512
வில்லரணம் பக். 587
வில்லவதரையன் 1535

வில்லவர் 800, 892, 893, 906, 1063;
--கோன் 1827
வில்லவராயமுதலியார் 1370
வில்லவனைவென்றபாண்டியன் 961
வில்லி - வில்லிபுத்தூரார் 1641
வில்லிபுத்தூர் 1845, 1846, 2147;—
வேதியன் 1780
வில்லிபுத்தூரம்மை - ஆண்டாள் 1834
வில்லிபுத்தூரார் 1582--5, பக். 520.
வில்லில் வெயில் உவமை 1097
வில்லேருழவர் 970
வில்விரவுங் கடற்றுனை 899
வில்வேலிக்கடற்றுனை 889, பக். 587
விலக்கியணவொழிதல் 228—32
விலக்கு ஒருபுறஞ்சொல்லல் 1790
விலங்கிவருங்கூற்று 295
விலங்குதல் 51
விலாவிறுதல் 392
விழலாவன 406
விழாக்காண்டல்மகளிர்கோளழியுமாறு
விழாக்கொடி 907 [241
விழாவணி 938
விழிக்குக் கரியெழுதல் 1609
விழிஞக்கடற்கோடி 877
விழிஞம் 885, 890, 892, 895
விழித்தவிழியெல்லாம் வேற்றுவிழியா
விழுப்பொருட்கல்வி 237 [தல் 1391
விழுமியோர்பெருமான் 133
விளக்கத்தனார்பாட்டு 15
விளக்குநிலை 578
விளக்கொளியெம்பெருமான் 2127 பக்.
விளைநிலமுழுவார் உவமை 297 [650
விளையாட்டுக்கவிப்பாட்டு 164
விளையாடாச்செப்பு 1456
விற்குடி 88
விற்கும்பரிசனம் 1149
விறக்கோடு 1399
விறல்வெய்யோன் 426, 430
விறலி 987;— (அவர்க்கு) விழுத்தா
யம் வீசுதல் 584
வின்ஞாணிடியொலி 688
விஞ - விஞவெண்பா 2044
விஞவுத்தரம் 1034, பக். 524
வினை ஐவகை 226, பக். 538
வினைக்காதி 11—13
வினைநிரனிறை 11—13
வினைப்பந்தம் கடப்பவரின்மை 2189
வினையாளைப்புகழுமிடம் 404
வினைவிபரீதமாதல் 345
வினையொழிகாலம் 100
விஸ்மயப்படுதல் 892
விஜய அபராஜிதவிக்கிரமவர்மன் வாக்
விஷ்ணு 170 [கு 1982
வீங்குநீர்த் திருத்தருத்தி பக். 603
வீச்சமை (பெயர்) - 1122
வீசுதல் - கொடுத்தல் 584
வீட்டினெறி 265
வீடணன் பக். 552
வீடாவது 221
வீடுபேறலகம் 169
வீமென் 754, பக். 543
வீரோதி 1382
வீணர் 1288
வீதகன்மஷன் 889
வீதிகள் ஆறுபோலுதல் 2165
வீதிவிடங்கன் 1407-8, 1592
வீதிவிடங்கன் கம்பன் 1047
வீமநாதபண்டிதர் 1743
வீமயன் 786
வீமற்கிளையோன் 761
வீமன் 759, 760, 1895;- போர் 758
வீமீச்சரம் 1145
வீரக்குகைவெட்டுதல் 1177
வீரக்கொடி 786, 834
வீரக்கொடை 191 [1007—11
வீரகஞ்சுகன் பக். 594;—சுந்தரன்
வீரகண்டகோபாலன் பக். 589
வீரகேசரி 786
வீரகேரளமாரன் 1788
வீரகேரளன் 783
வீரர் கங்கைபரந்தாங்குப் பரத்தல் 446
வீரர் கோழிப்போர்மூட்டுதல் 718
வீரசம்பராயன் 1577
வீரசலாமேகன் 783—4
வீரசிங்காதனபுராணம் 1944, 1949
வீரசிங்காதனம் } 786, 787, 799,
801, 811, 819, 834,
வீரசிம்மாதனம் } 896, 906—7, 911,
2120
வீரசைவமாகேசன் 1959
வீரசைவன் 1960
வீரசோழன் 784, 1465; பக். 635

வீரசோழியக்காரிகை 1468
வீரனருஞ்செயல்பற்றிய துடியன்கூ
வீரட்டம் 1112, 1119 [ற்று 704
வீரட்டானம் 1047
வீரட்டானர் 1107
வீரத்தாய் 702—6, 721—2;—மக
னைக் குறைந்துகூறுங் கூற்று 705
வீரதான் 833
வீரநாராயணச்சதுர்வேதமங்கலம்
வீரப்பன் 1968 [1665
வீரப்பாடு 1645
வீரபத்திரகவி 1790
வீரபாண்டியன் 834, 958—62;—
மகன்பட்டது 834;—முடிசூடியகால
ம் 958—62;
வீரபுரோகன் 889
வீரபூபதி 1917
வீரர்பட்டபுண் அரசன் இன்மொழி
யால் ஆறுதல் 457
வீரம் புலியை அடைந்ததாகக்கூறல்
வீரமாவது 340 [977
வீரமாறன் 961—2, 964, 968, 1194
வீரராகவன் 1582, 1677
வீரராசேந்திரன் 788—90, 1216
வீரவெண்பாமாலை 953 [2151
வீரவேள் குலசேகரபாண்டியன் 953
வீரன் (மயிலை—) 1044, (-வீரராசேந்
திரன்) 1467; (-திருமால்) 1498;-
இருப்புமணியும் தன்தலையும் கொற்
றவைக்கு உதவல் 425
வீராபிஷேகம் 906 பக். 589
வீரை 938;—அம்பிகாபதி 1659;—
ஆசுகவிராசர் 1661;—கவிராசபண்
டிதர் 1658;—ஆளைத்தக்கூத்தர் 1736;
—மாதவபட்டர் 1654
வீரையதேசிகன் 1779
வீரையன் 1259
வீரையான் 1658
வீரோதயன் 833
வீழித்துலுக்கர் 1639
வீழித்துலுக்கு 1638
வீழியார் பக். 635
வீழிவாய் 1766
வீளிக்கொடுகா 294
வீறு 266
வெஃஃகுதல் 318
வெஃகா 29
வெங்காலநாடு 2106
வெங்கை - பதி 1943;—பிடாரி 1926;
—உலா 1943
வெட்சி 419, 420—36, 986;—மற
வர் 443;—மாலை 1045;—மிலைச்சு
தல் 429
வெட்சித்தாயத்துவில்லேருழவர் 970
வெட்டித்தண்டித்தவர் ஒட்டக்கூத்தர்
வெட்டெனவுரைத்தல் 250 [1641
வெண்கலிப்பாவகை 132
வெண்களபம் 2166
வெண்காட்டுளான் 1022
வெண்காடு 1216
வெண்கிழான் 1979
வெண்குடைமூன்று 168
வெண்குருத்துக்குச் சங்கு உவமை
வெண்டறைநிற்றல் 266 [1411
வெண்டாழிசைவகை பக். 33
வெண்டாளி 1384
வெண்டேர்ச்செழியன் 1384
வெண்டேரியக்கம் - பாலை 2014
வெண்ணிலா 1278
வெண்ணீர்மைதாங்குவன 562
வெண்ணெய் புனிதமும் எச்சிலும் நீக்
கப்படுதல் 219 [1434
வெண்ணெயுருக்கிநறுநெய்கொடுத்தல்
வெண்ணை 1495, 1886;—சடையன்
1513;—சுவேதவனன் 2045;—திரி
கர்த்தன் 1132-3;— மெய்கண்டான்
1671;—மாநகர் 1901
வெண்ணைநாடன் 1134
வெண்பாமாலை 1563
வெண்பாவந்தாதி 1531
வெண்பேடு 972
வெண்மை 899 [தல் 858
வெய்யோன் வீரியத்துக்குக் கூறப்படு
வெயிலின் தன்னனு உவமை 1536
வெயிலோன் 220
வெயிற்கோலத்தவர் 100
வெரிந் 15
வெல்வருகவென்று வீரனையேவுதல்
வெள்ளங்களின்வகை 1011 [722
வெள்ளணிநாள் 568—70
வெள்ளந்தீப்பட்டமை 2092
வெள்ளம்பு 77

வெள்ளமறவிவிறல்வேந்தர் தீத்தாயம்
என்ற பஞ்சக்கிலேசம் 311
வெள்ளாண்மரபு 2019
வெள்ளாண்வேதம் 2018—9
வெள்ளாறு 2093, 2098;—செய்யா
வெள்ளானை 1295 [ருயது 917
வெள்ளிக்குன்று 2105
வெள்ளி பெண்ணைவழியொழுகல் தீக்
காலக்குறியாதல் 865
வெள்ளியம்பலவாணத்தம்பிரான் 1921
வெள்ளியெழுதல் 1619
வெள்ளில்சேர்வியன்காடு 165
வெள்ளிலை செம்பழுக்காயொடேந்தல்
வெள்ளைவேல் 287 [691
வெள்ளூர் 890
வெள்ளூர்க்காப்பியன் 1384
வெள்ளெலும்பு 1239
வெள்ளைக்கிழத்தி 1947
வெள்ளைப்பரிமுகர் 1855
வெள்ளையானை 1876
வெள்ளோடைச் சாத்தந்தை 1345
வெள்ளோலை 408
வெளிவிருத்தம் 206
வெளிறுபடுநல்யாழ் 1402
வெளுப்பன் 1317
வெற்றத்தானை 890
வெற்றிகொண்டான் 1259
வெற்றிப்பாடு 1645
வெறுங்கூடுகாவல்கொள்ளல் 672
வென்றி 552—3
வேங்கடக்குமரி 1712
வேங்கடநாடன்காளிம்பன் 998
வேங்கடநாதன் 1774
வேங்கடம் 46, 2102
வேங்கடராயன் 1622
வேங்கடவாணர் 1124
வேங்கைநாடு 780, 786
வேங்கைமண்டலம் 799, 811
வேங்கைவளநாடன் 1050
வேட்கோக்குயக்கோடன் 1396
வேட்போன் - ஆன்மா 1536
வேட்டமா 628
வேட்டன் 768
வேட்டுக்குமரன் பக். 621
வேட்டுவன் 672
வேடாகியநாயனார் 1872
வேடுபறித்திருக்கோலம் 1863
வேடுவன்சேரியில் கத்தூரி விலைச்செல்
லாமை 1322 [னும் வருவது 296
வேண்டாவிடினும் போகாது வேண்டி
வேண்மணிப்பாடி 1167
வேண்மன்னன் 783, 890
வேணது 1338
வேணாட்டரசு 783
வேணாடர்—ன் 903, 920, 1231—2
வேணுவுடையான் } 1350
வேணுடையான் }
வேணும் 1249, 1250, 1622
வேதக்கோன் 1846
வேதசயிலபுராணம் 1251
வேதண்டமெட்டு 913
வேதப்பயனும் (குறட்) பாயிரம் 2004
வேதப்பிரான்பட்டர் 1846 [1553
வேதபோதன (நச்சினார்க்கினியர்)
வேதம் - பசுவாக உருவகம் 1885;—
வண்டாக உருவகம் 124
வேதவனம் 1875, 1957, 1702
வேதாகமம் 1543
வேதாந்தசாகரம் 1789 [ருள் 1754
வேதாந்தசூடாமணி 1944;—உட்பொ
வேதாந்ததேசிகன் 1854—6, 2089
வேதாந்தப்பா 1835
வேதாந்தம் 1841
வேதாந்தவிரதியர் 1581
வேதாரணியசாஸனம் பக். 598
வேதாளகதை 1786
வேதுகொள்ளுதல் 1141
வேந்தர்கண்வெம்மைமாற்றல் 579
வேந்தன்சிறப்பு 233
வேந்தன்மோதிரம் 455
வேந்தன் றரும்பாமிடம் 405
வேப்பந்தார் 964
வேப்பநெய் 1609
வேம்பத்தூர் - புலவர்களியற்றிய நூல்
கள் 1652;—பிராமணப்பிள்ளையன்
வேம்புமலைந்தாடியது 717 [1649
வேம்பை 1568
வேம்பையர்கோன்நாராயணன் 1567-
வேய் 424—5, 430 [8
வேயீன்றமுத்தர் 1575
வேர்முதல்கீளுதல் 762
வேல் - சிவன்படைக்கலம் 1

வேலப்பதேசிகர் 2063
வேலபூபன் 2090
வேலன்வெறியாட்டு 719
வேலாயுதமகாமந்திரி 1791
வேலாயுதன் 1631
வேலி (பெண்) 1502
வேலிகாவலான் 1049
வேலியர்கோன் 1048
வேலின்சிறுநிழல் 287
வேலூர்மன்னன் 1382
வேலெறிந்தவார்த்தை 1179
வேலையர் 1940, 1944, 1949
வேழகம் 834
வேள் 1116; (நாடு) 2107
வேள்குலச்சளுக்கியர் 783
வேள்குலத்தரசர் 799
வேள்விகுடிச்சாஸனப்பகுதி 889
வேள்விச்சாலை 889
வேள்வினிலை 577
வேளாண்குடி 1112
வேளாண்மைசெய்தல் 580
வேளாண்வாழ்க்கை 1530
வேளாப்பார்ப்பான் பக். 617
வேளாளரானநாயன்மார் 1872
வேளாளர்நிரைகாவல் 400
வேளாளருங் கம்பரும் 1501
வேளூர்க்கம்பன் 1241
வேளைநடுங்கல் 1177
வேற்கண்டன் 1476
வேற்காட்டுப்புராணம் 1957
வேற்றுப்பொருள்வைப்பு பக். 539
வேற்றொழில்வன்மை 756
வேறிரித்திடுதல் 1426
வேன்மிடைந்தவேலி பக். 587
வேனல் 2204, 2206
வேனிலான் 43;—ஐங்கணை 544
வேனிற்றிரு 2201—5
வைகரி 2061
வைகற்புராணம் 1962
வைகாவூர் 2105
வைகுந்தம் 1947
வைகை—கோ 1979;—மலை 1979
வைத்தியசிகாமணி 899
வைத்தியநாதகுரு 1713
வைத்தியநாததேசிகர் 1711, 1716,
வைதும்பராயன் 786 [1718, 1724
வைப்புப்பொருள் 1344
வைப்பூர் 892
வையாவியின் கோத்திரம் 1771
வையைக்கிழவன் 685
வையைக்கோனார் 1426
வையைத்துறைவன் 1410
வையையார்கோ 1038
வையையொண்டுறை 584
வைராக்கியதீபம் 1960
ஜயநந்திவர்மன் பக். 532
ஜயஸ்தம்பம் பக். 606
ஜாதகக்கதை பக். 534—7
ஸ்ரீகீதை பக். 522
ஸ்ரீபாஷ்யம் முடிந்தகாலம் 1837
ஸ்ரீமுஷ்ணம் பக். 520
ஸ்ரீராஜராஜேசுவரி பலிபீடம்பக். 609
ஸ்ரீவசனபூஷணவியாக்யானம் 1860
ஸ்ரீவில்லிபுத்தூர் 2137;-கோபுரம் 32;
—கோயிற் சாஸனப்பாட்டு பக். 10
ஸப்தபங்கிநியாயம் பக். 530, 532
ஸப்தசைலம் பக். 618
ஸப்தவிடங்கஸ்தலம் பக். 526
க்ஷேத்ரபாலபுரம் பக். 621
ஹம்பி பக். 606
ஹூல்ஷ்துரை(டாக்டர்) பக். 579

—

ஸ்ரீ :

பெருந்தொகை.

சென்னை யூனிவர்ஸிடி

தமிழ் - லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர்

இராமநாதபுரம்

மு. இராகவையங்கார்

தொகுத்தது.

செந்தமிழ்ப்பிரசுரம்—௬௨.

மதுரைத்

தமிழ்ச்சங்கமுத்திராசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

யுவ-௵ = 1935—1936.

ஸ்ரீ:

இப்புத்தகத்திலடங்கியவை.

1. உரிமையுரை ... ...
2. முகவுரை ... ... க—ரு
3. பெருந்தொகையுள் எடுத்தாண்ட நூல்களின் அட்டவணை. ... ... சா—அ
4. பெருந்தொகை ... ... க—ருகரு
   - க. கடவுள்வாழ்த்தியல் ... க—சா0
   - உ. அறவியல் ... ... சா0—அக
   - ந. பொருளியல் ... ... அக—ருகரு
5. விசேடக்குறிப்பு ... ... ருகஎ—சாருச
6. செய்யுண்முதற்குறிப்பகராதி ... 1—XXVII
7. பொருட்குறிப்பகராதி ... ... 1—91

உரிமையுரை.

பண்பார் பெருந்தனமீ தென்னதென்றே பாராட்டிக்
கண்பார்த் துவந்தவென்றன் கன்னித் திருமகளவ்
விண்பா லடைந்துமுளம் விட்டகலா வேதவல்லிப்
பெண்பாவைக் கேயுரிமை யாமிப் பெருந்தொகையே.

ஶ்ரீ:

முகவுரை.

தமிழ்மக்களால் விரும்பிப் பாதுகாக்கப்பட்டுவந்த பழைய இலக்கியங்களுள்ளே 'தொகைநூல்கள்' என்பன ஒரு பகுதியாம். அவை அகமும் புறமுமான திணைகள்பற்றிச் சான்றோர்பலரால் பலசந்தர்ப்பங்களையொட்டிப் பாடப்பட்ட செய்யுட்களின் திரட்டாகும். பண்டைச் சரித்திர விசேடங்களாலும் வனப்புமிகுதியாலும் அப்பாடல்களில் தமிழ்மக்கட்கிருந்த ஈடுபாடு மிக அதிகம். அதுபற்றிப் பின்னோரான அறிஞர்கள், அவை பாடப்பட்ட சந்தர்ப்பங்களும் திணை துறைகளும் விளங்கக் குறிப்புக்களிட்டு ஒரு கோவைப்படத் தொகுத்துதவினர். அங்ஙனம் தொகுத்திட்ட நூல்களே 'எட்டுத்தொகை' எனப் பிரபலமாக வழங்குவன.

"நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தா ரேத்துங் கலியே யகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை"

இத்தொகைநூல்களிற் கண்ட பழைய புலவர்களின் தொகை 500-க்கு மேற்பட்டனவாம். சங்ககாலத்து வாழ்ந்த புலவர்பெருமக்களுள் சாத்தனார் கபிலர் போன்ற ஒருசிலர் செய்தனவன்றி, ஏனையோர் நூல்களாக இயற்றியவை இன்னவென்பது தெரியவில்லை. ஆனால், அன்னோர்பாடிய தனிப்பாடல்களோ மிகப்பலவாகக் கிடைக்கின்றன. அவைமட்டில் நோக்குவோர்க்கு அப்பெருமக்களது ஒப்புயர்வற்ற புலமை நன்குவிளங்கக்கூடியது. தாம் கொண்டிருந்த மனோபாவங்களை உள்ளதுஉள்ளபடியே இயற்கை நயம்பெருக எடுத்துரைப்பதில் அவர்கட்கிருந்த தூய்மையும் ஊக்கமும் சுதந்தரமும் பின்னோர் பெற்றிருந்தவரல்லர். இத்தகைச் சிறப்பியல்புபற்றியே அத்தொகைச்செய்யுட்கள் தமிழ்மக்கள் நெஞ்சில் நன்குபதிந்து பன்னூறாண்டுகளாகச் சேமிக்கப்பட்டு வரலாயின. இவ்வாறு தமக்குமுன் விளங்கிய நல்லிசைப்புலவர்

பாடல்களைப் பின்னோர்பொருட்டுத் தொகுத்துதவிய பண்டைப் பெருமக்களின் அருஞ்செயலை நாம் பெரிதும் பாராட்டல் தகும். நாட்டில் அங்கங்கே சிதறிவழங்கிய தனிப்பாக்களை முயன்று தொகுத்துக் குறிப்புக்களுடன் இன்னோர் நமக்களித்திலரேல், சங்ককால த்துப்புலவர்களின் அருமைப்பெயர்களையேனும், பெருமைச்செய்திகளையேனும், முற்காலத்து நிலைமை நிகழ்ச்சிகளையேனும் நாம் சிறிதேனும் அறிய இடமுண்டோ? இவ்வாறே இடைக்காலத்தும் பிற்காலத்தும் வாழ்ந்த தமிழ்ப்பெருமக்களின் தனிப்பாசுரங்களும் எத்தனையோ வழங்கியிருத்தல்வேண்டும். அவையெல்லாம், அப்புலவர்பெயர் முதலியவற்றோடு பெரும்பாலும் மறைந்தொழிந்தன. இதன்காரணம், முன்னோர்போல அவற்றைப் பின்னோரும் சேமித்துத் தொகுத்துதவத் தவறியதேயாம். அதனால், சங்கத்தின் பிற்கால வழக்க ஒழுக்கங்களையும் அரசியல் முதலிய நிலைமைகளையும் நாம் அறிந்து மகிழ்தற்கு இடமில்லையாயிற்று. தமிழ்க்குப் பேருபகாரமான இவ்வரியசெயலை நமக்கு முன்னிருந்தோர் நெகிழவிட்டது நம் தவக்குறைவேயாகும். இரண்டு மூன்று நூற்றாண்டுகட்குமுன் **தமிழ்நாவலர்சரிதை** என்ற பெயரால் தொகுக்கப்பட்ட சிறிய செய்யுட்டிரட்டொன்று இப்போது வெளிவந்துளது. இந்நூலினின்று, கூத்தர் கம்பர் முதலிய புலவர்பெருமக்களின் அரிய வரலாறுகள்சில நமக்குத் தெரியவருகின்றன. ஆயினும் பன்னூறாண்டுகட்குரிய தமிழ்ச்செய்திகளை அறிதற்கு இத்திரட்டுச் சிறிதும் போதியதன்று. இஃதன்றித் தனிப்பாடற்றிரட்டுப்போன்ற நூற்றொகுதிகளும் இவ்வகைபற்றி நம்காலத்து எழுந்தனவே. அவை, பின்னோரான புலவர்பாடல்களையே பெரிதுங் கொண்டனவாகவும், பழம்பாடல் பலவற்றைப் பிறழ்ந்த சரிதக்கூறுகளுடனும் பாடங்களுடனும் வெளியிடுவனவாகவும் அமைந்தன. அதனால், அறிஞர்களது ஆராய்ச்சிக்குரிய பிரமாணநூல்களென்று அவற்றைச் சொல்வதற்கில்லை. இங்ஙனமாக, மத்தியகாலம் பிற்காலங்களுக்கு உரியதாய், பழமையான குறிப்புக்களுடனும் பாடங்களுடனும் இயல்பெற அமைக்கப்பட்ட தனிச்செய்யுட்கோவை தக்கதாக இதுவரை கிடைத்திலது என்றே சொல்லலாம். இக்குறையை ஓரளவில் நீக்குதற்கெழுந்ததே இத்தொகைநூலாகும்.

பண்டை இலக்கிய இலக்கண நூலுரைகளிற் பழகிவரும் அறிஞரெல்லாம், அவற்றில் மேற்கோளாகவும் பிறவாறாகவும் ஆளப்பட்டுள்ள பழஞ்செய்யுட்கள் பெரும்பாலவும் சொற்செறிவும் பொருட்பொலிவு முடையவாய் இன்பம்பயப்பன என்பதை நன்கறிவர். அவ்வாறு சிறந்துள்ளனவேனும் நூல்கற்போர் அப்பாடல்களை உதாரணவளவிற்கொண்டுநோக்கி நெகிழவிடுவதே நெடுங்கால வழக்கமாயுள்ளது. அப்பாடல்களெல்லாம் அதிகாரவடைவில் வைத்துத் தொகுக்கப்பெறின் அஃது ஒரு சிறந்த இலக்கியமாகி, முன்னோரின் அருமைபெருமைகளை நம்மவர் அறிந்து மகிழ்தற்கு இடமாகும் என்ற எண்ணம் பலவாண்டுகட்குமுன் எனக்குத் தோன்றியது. அதனால் தொல்காப்பியம் யாப்பருங்கலம் காரிகை வீரசோழியம் முதலிய இலக்கணநூல்களின் பழையஉரைகளினின்றும், முற்காலத்தவும் பிற்காலத்தவுமான இலக்கியவுரைகளினின்றும் கிடைத்த தனிப்பாக்களையெல்லாம் தொகுக்கலானேன்.

இம்மேற்கோட்பாடல்களுள் ஒருபகுதி இப்போது அச்சேறிய நூல்களிற் காணக்கூடியனவாயினும், உரைகாரர்காலத்து வழங்கி இப்போது பெயர்தெரியாத நூல்களினின்று உதகரிக்கப்பட்ட செய்யுட்களும் அவற்றிற் பல உள. அவற்றுள்ளே வெளிவந்த நூற்பாடல்களை விடுத்து, இன்னநூலென்று தெரியாத உதாரணச்செய்யுட்களும், உரையாளர்களாற் பெயர்கூறி ஆளப்பட்டு இப்போது கிடைத்தற்கரியவாயுள்ள பாரதம் தகடூர்யாத்திரை முத்தொள்ளாயிரம் ஆசிரியமாலை முதலிய நூற்பாடல்களுமே இதனுட் கோக்கப்பட்டன. இவற்றோடு பற்பல புத்தகசாலைகளிலும் பிறர்பாலுமுள்ள ஏட்டுப்பிரதிகளாலும், பத்திரிகைகளாலும் தெரியவந்த பழம்பாடல்களும் சேர்ந்தன. பரம்பரைப்புலவர்கள் மூலமாகவும் பிற தமிழ்மக்கள்மூலமாகவும் வாய்மொழியாகக் கிடைத்த தனிக்கவிகளும் பல. இவையன்றி, சிலா தாமிர சாஸனங்களில் அரசர் பெரியோர் முதலியவரைப்பற்றியும் பற்பல அறச்செயல்பற்றியும் முன்னோர் அருமையாகப் பாடிப்பொறித்த செய்யுட்களையெல்லாம் கிடைத்தவளவில் திரட்டி இந்நூலுட் சேர்த்துளேன். இங்ஙனமாகத் தொகுத்த பாடல்களின் மொத்தத்தொகை 3500க்கு மேற்பட்டதாகும். இவற்றை–கடவுள்வாழ்த்து, அறவியல், பொருளியல், இன்பவியல், ஒழிபியல் என ஐந்தியல்களாக வகைப்படுத்தி இந்நூல் அமைக்கப்பெற்றது.

முகவுரை.

இங்ஙனம் பெற்ற இந்நூற்குப் பெருந்தொகை எனப் பெயர் தரலாயிற்று. அடியளவாற் குறுமையும் நெடுமையும் உடைமை நோக்கிக் குறுந்தொகை, நெடுந்தொகை (அகநானூறு) என முன்னோர் பெயர்வழங்கியவாறுபோல, எண்ணளவாற் பெருமையுடைய இந்நூற்கேற்ப ஏற்புடைய இப்பெயர் தரப்பட்டது. இந்நூலுள், கடவுள்வாழ்த்து அறவியல் பொருளியல்களின் தொகை 2214—ஆயினமையின், இதன் முதற்றொகுதியாக அம்மூன்றியல்களும் இப்போது தனியே வெளியிடப்படுகின்றன. விசேடக்குறிப்பு, செய்யுண்முதற்குறிப்பகராதி, பொருட்குறிப்பகராதி, எடுத்தாண்ட நூலட்டவணை முதலியவும் இதனுடன் சேர்த்துள்ளேன். இவற்றுள், விசேடக்குறிப்பிலே, இன்றியமையாது விளக்கற்குரிய பொருள்களும் சரித்திரக்குறிப்புக்களுமே எழுதப்பட்டன. ஆனால், விஷயசூசிகை என்றபொருட்குறிப்பகராதியைச்சிறிது விரிவாகவே தந்துளேன். தமிழ்மொழியின் சொல், பொருள், சரித்திரம் முதலியனபற்றி ஆராய்ச்சிசெய்வார்க்கு இவ்வகராதி தக்கதோர் கருவியாகவேண்டுமென்பது என் விருப்பம்.

இங்ஙனம் தொகுக்கப்பட்ட பழஞ்செய்யுட்களிலே பொருள் செவ்வனே புலப்படாத இடங்களுமுண்டு. வேறு ஏட்டுப்பிரதிகளின் துணையின்றி வெளிவந்த அச்சுப்பிரதிகளினின்றே திரட்டப்பெற்றமையால், உள்ளவாறே அவை பதிப்பிக்கப்படலாயின. ஒருசெய்யுளே பலவுரைகளிலும் உதகரிக்கப்பட்டவிடத்து ஒப்புநோக்கிப் பாடபேதங்களும் உண்மையுருவமும் தெரியவந்தன. அத்தகைய பாடங்கள் கீழ்க்குறிப்பிலே, நூற்பெயரிடங்களைக் குறித்துவருமிடத்து, அவ்வப் பாட்டெண்களையொட்டிக் காட்டப்பட்டுள்ளன. நூல் அச்சாகிவரும்போது கண்ட திருத்தங்களை விசேடக்குறிப்பில் விளக்கியிருக்கிறேன்.

இந்நூலின் இன்பவியல் ஒழிபியல்களை இரண்டாந்தொகுதியாக வெளியிடக்கருதியுளேன். அதன் பாடற்றொகையை இப்போது வரையறுத்துக்கூறல் இயலாது. எனினும், உத்தேசமாக 1500 வரையாகலாம் என்று நினைக்கிறேன். தொகுக்கு முயற்சியைத் தொடர்ந்துநடத்துமிடத்து இதுபோலுந் தொகைநூல்கள்

பெருகிக்கொண்டே செல்லக்கூடியவை. அதனால், பதிப்புக்கள்தோறும் புதுத்தோற்றங்கொண்டு பலதொகுதிகளாக இவை விளங்கத் தடையில்லை. அவ்விளக்கம் தமிழ்மகட்கு ஓர் அலங்காரமுமாகும்.

இப்பெருந்தொகையை யான் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிடத்தொடங்கிப் பல ஆண்டுகளாயின. தொடங்கும்போது சில ஆண்டுகளில் இதனைத் தொடர்ந்துநடத்தி முடித்துவிடலாம் என்ற உறுதியே கொண்டிருந்தேன். இடையில் நேர்ந்த மனக்கிலேசத்தால் இதனை நெடுங்காலந் தாழ்க்கும்படிநேர்ந்ததற்குப் பெரிதும் வருந்துகின்றேன்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் இந்நூலைப் பதிப்பிக்க முன்வந்து செந்தமிழ்ப் பிரசுரங்களுள் ஒன்றாக இதனை வெளியிட்டது மிகவும் பாராட்டற்குரியது. இவர்களது இடைவிடாத தூண்டுதலும் பொறுமையுமே இதனை நிறைவேற்றிவைத்தன எனலாம். இச்சங்கத்தார்க்கு என் மனமார்ந்த பெருநன்றி உரியதாகுக. இதன் பதிப்பை என் விருப்பம்போல அச்சிட்டுதவிய செந்தமிழ் உதவிப் பத்திராசிரியர் ஸ்ரீ. திரு. கி. இராமாநுஜ ஐயங்கார் அவர்கட்கு யான் பெரிதுங் கடப்பாடுடையேன். இந்நூலின் அருமையறிந்து இதனை விரைந்து முடிக்கவிரும்பி என்னை அடிக்கடி உசாவியும் தூண்டியும் வந்த அன்பர்கட்கெல்லாம், இதன் நிறைவேற்றம் எனக்குள்ளதினும் அதிக மகிழ்ச்சி விளைக்கக்கூடியது.

இந்நூலில் எத்தனையோ குற்றங் குறைகள் உள்ளன. அவை என்னொருவனையே பற்றியவையல்ல. நல்லறிஞர் அவற்றைப் பெரிதும் பாராட்டாது அமைத்துக்கொள்வார்களென்றே நம்புகிறேன்.

முடிவாக, இப்பெருந்தொகையின் முதற்றொகுதியை அறிவிற் சிறியேனாகிய என்னைக்கொண்டு நிறைவேற்றியருளிய இறைவன் கருணைத்திறத்தை வியந்து வந்திக்கின்றேன்.

திருவல்லிக்கேணி
14—12—35.

இங்ஙனம்,
மு. இராகவையங்கார்.

ஸ்ரீ:

பெருந்தொகையுள் எடுத்தாண்ட *நூல்களின் அட்டவணை

அகநானூறு
அகப்பொருள்விளக்கம் (உரை.)
அகராதிநிகண்டு
அகலிகைவெண்பா - முகவுரை
அரிச்சந்திரபுராணம்
அஷ்டப்பிரபந்தம்
ஆசிரியமாலை
ஆத்திசூடிவெண்பா
இரகுவமிசம்
இராசராசசோழனுலா
இராமநாடகம்
இராமாநுஜாரியதிவ்யசரிதை
இருசமயவிளக்கம்
இரும்பல்காஞ்சி
இலக்கணக்கொத்து
இலக்கணவிளக்கம்
இளம்பூரணம்
இறையனார்களவியலுரை
ஈட்டியெழுபது
உபதேசகாண்டம்
உபதேசவெண்பா
உரிச்சொனிகண்டு
உவமானசங்கிரகம்
ஊசிமுறி
ஏகாம்பரநாதருலா
ஏரெழுபது
கணக்கதிகாரம்
கடம்பவனபுராணம்
கல்லாடம்
கலிங்கத்துப்பரணிப்பிரதிகள்
கலித்தொகை
கனாநூல்
காஞ்சிப்புராணம்
குண்டலகேசி
குமரகுருபரமுனிவர் பிரபந்தத்திரட்டு
குருகாமான்மியம்
குருபரம்பரை
குலோத்துங்கசோழன்-உலா, கோவை,
 - பிள்ளைத்தமிழ்
குழைக்காதர்திருப்பணிமாலை
குறுந்தொகை
கூர்மபுராணம்
கெயாகரநிகண்டு
கொங்குமண்டலசதகம்
கோயிலொழுகு
சங்கற்பநிராகரணம்
சரசோதிமாலை
சரபோசிராசன்குறவஞ்சி
சருவார்த்தசாரபூடணம்
சாதகசிந்தாமணி
சாந்திபுராணம்
சிங்கைப்பிரபந்தத்திரட்டு
சிதம்பரப்பாட்டியல்
சிதம்பரபுராணம்
சிலப்பதிகாரம்
சிலாசாஸனத்தொகுதிகள்
சிவஞானசித்தியார் உரைகள்
சிவஞானபோதம்
சிவஞானமுனிவர்பிரபந்தத்திரட்டு
சிவப்பிரகாசம்
சிவரகசியம்
சிறுபஞ்சமூலம்
சீவகசிந்தாமணி
சீவகசிந்தாமணிச்சுருக்கம்
சுந்தரபாண்டியம்
சூடாமணிநிகண்டு

* இந்நூல்களின் பாயிரங்கள், முகவுரைகள், பழைய உரைகள், குறிப்புக்கள் முதலியவற்றிற் கண்ட தனிப்பாடல்களைத் தேடித் தொகுத்தற்கே இவை ஆராயப்பட்டன என்க.

சூடாமணி உள்ளமுடையான்
சூளாமணி
செங்குந்தர்பிரபந்தத்திரட்டு
செந்தமிழ்ப்பத்திரிகைத்தொகுதிகள்
சேதுநாடுந் தமிழும்
சேதுபுராணம்
சேயூர்முருகன்பிள்ளைத்தமிழ்
சேனாவரையம்
சோழமண்டலசதகம்
சோழவமிசசரித்திரம்
சௌந்தரியலகரி
ஞானவாசிட்டம்
ஞானாமிருதம்
தீகேர்யாத்திரை
தஞ்சைச்சரச்சுவதிமால் பிரதிகள்
தஞ்சைவாணன்கோவை
தட்சிணகைலாசபுராணம்
தண்டலையார்சதகம்
தண்டியலங்காரம்
தமிழ்நாவலர்சரிதை
தமிழ்ப்புலவர்சரித்திரம்
தனசிங்கமாலை
தனிப்பாடற்றிரட்டு
தாயுமானவர்பாடல்
திருக்கலம்பகம்
திருக்களர்ப்புராணம்
திருக்காளத்திநாதருலா
திருக்குறள் ஏட்டுப்பிரதிகள்
திருக்கைலாயஞானவுலா
திருச்சிற்றம்பலக்கோவையார்
திருச்செங்கோட்டுத்திருப்பணிமாலை
திருச்செந்தூர்ப்பிள்ளைத்தமிழ்
திருப்பதியம்
திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம்
திருப்பாமாலை
திருப்பூவணநாதருலா
திருப்பெருந்துறைப்புராணம்
திருவாசகவேட்டுப்பிரதிகள்
திருவாப்புடையார்புராணம்
திருவாமாத்தூர்க்கலம்பகம்
திருவாரூர்ப்புராணம்
திருவாரூருலா
திருவாலவாயுடையார் புராணம்
திருவிளையாடற்புராணம்
திருவெள்ளூர்ப்புராணம்
திருவையாற்றுப்புராணம்
திவாகரம்
தினகரவெண்பா
தீபங்குடிப்பத்து
தேசிகப்பிரபந்தம்
தொல்காப்பிய உரைப்பிரதிகள்
நச்சினார்க்கினியம்
நந்தமண்டலசதகம்
நந்திக்கலம்பகம்
நம்பியகப்பொருளுரை
நன்னூல்சங்கரநமச்சிவாயருரை
நன்னூல் மயிலைநாதருரை
நாரதசரிதை
நாலடியாருரைப்பிரதிகள்
நாலாயிர திவ்யப்பிரபந்தம்
நீலகேசி
நுண்பொருண்மாலை
நைடதம்
பண்டாரசாத்திரங்கள்
பத்துப்பாட்டு
பரிப்பெருமாள் திருக்குறளுரை
பரிபாடல்
பரிமேலழகருரை
பல்காப்பியம்
பழனிப்புராணம்
பன்னிருபடலம்
பாகவதசாரம்
பாகவதம்
பாண்டிமண்டலசதகம்
பாவலர் சரித்திர தீபகம்
பிங்கலநிகண்டு
பிரபோதசந்திரோதயம்
பிரமோத்தரகாண்டம்
பிரயோகவிவேகம்
புகலூரந்தாதி
புரூரவசரிதை
புலவராற்றுப்படை
புலியூரந்தாதி
புறத்திரட்டு
புறப்பொருள்வெண்பாமாலை
பூளைவனப்புராணம்
பெரியபுராணம்
பெருங்கதை

பெருந்தேவனார்பாரதம்
பெரும்பொருள்விளக்கம்
மச்சபுராணம்
மணிமேகலை
மதுரைச்சங்கத்துப் புத்தகசாலைப் பிரதிகள்
மதுரைத் திருப்பணிமாலை
மயூரகிரிக்கோவை
மாயூரப்புராணம்
மிழலைச்சதகம்
முத்தொள்ளாயிரம்
மூப்பேட்டுச்செய்யுள்
மூவருலா
மெய்கண்டசாத்திரங்கள்
மெய்ஞ்ஞானதீபம்
மேருமந்தரபுராணம்
யதீந்திரப்ரவணப்பிரபாவம்
யாப்பருங்கலக்காரிகையுரை
யாப்பருங்கலவிருத்தி
வச்சணந்திமாலை
வரதராசர்பாகவதம்
வளையாபதி
விக்கிரமசோழனுலா
விஞ்சைக்கோவை
விநாயகபுராணம்
விம்பசாரகதை
விநோதரசமஞ்சரி
வீரசிங்காதனபுராணம்
வீரசோழியவுரை
வேதாளகதை
வேற்காட்டுப்புராணம்
வைராக்கியதீபம்
ஸ்ரீவசனபூஷணம்
Epigraphica Carnatica
Epigraphica Indica
Epigraphical Reports
Inscriptions of the Madras Presidency
Journal of South Indian Association
South Indian Inscriptions
Tamil and Sanscrit Inscriptions
T r a v a n c o r e Archaeological Series.
Triennial Catalogues of Manuscripts, Govt. Oriental Manuscripts Library, Madras.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

	ஐந்திணையைம்பது உரையுடன்	0	4	0
2.	கணூல் (5) இனியநாற்பது (உரையுடன்) ...	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	இணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	சரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	அகப்பொருள்விளக்கம்	1	4	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
	திருப்புல்லாணிமாலை	0	2	0
	பழமொழி மூலமும் பழையஉரையும்(முதல் 100 செய்)	1	0	0
	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	(

45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பதமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	
48.	சேதுநாடும் தமிழும்	0	6	
49.	கடைவள்ளலார்காலம்	0	[illegible]	
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51.	மதங்கசூளாமணி	1	0	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர்	0	6	0
	௸ ஆங்கிலத்தில்	0	6	0
54.	அரும்பொருள்விளக்க நிகண்டு ...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0

மேலேகண்ட சங்கப்பதிப்பில்லாத புத்தகங்கள் வேண்டுவோர் வேறு புத்தகசாலைகளுக்குத் தாங்களே நேரில் எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 32 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மிநாராயணையர், மானேஜர்.